விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்,
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

முதற் பதிப்பு
பக்கங்கள் 4

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா „ 12-00
1 வருடச் சந்தா „ 24-00
மானேஜர்
"சுதந்திரன்,"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.
'Phone: 8411

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும்
சுதந்திரத்திற்காக வெளிவருவது.

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ஸ்ரீ கார்த்திகை மீ 28உ சனிக்கிழமை — Colombo, December, 13, 1947 — ஹிஜ்ரி 1367 முஹர்ரம் பிறை 29 | இதழ் 192

இலங்கையின் பயங்கரமான பொருளாதார நிலை

யூ. என். பி. அரசாங்க பொக்கிஷ நிர்வாக அலங்கோலம்

பணங்கள் விரயம்; பலன்கள் பூஜ்யம்!

கொள்ளை லாபத்துக்கும், கள்ள மார்க்கெட்டுக்கும் சாராயப் பண வேட்டைக்கும் ஆதிக்கமளிக்கும் வரவு செலவுத் திட்டம்

விளை பொருட்களை குறைந்த விலைக்கு விற்று அதிக விலைக்கு உணவு வாங்கும் விசித்திரம்

ஏழை தின்னும் வெண்ணெய்க்கு மண் ; பணக்காரன் உற்பத்தி செய்யும் ரப்பருக்கு சப்பைக்கட்டு

யாழ்ப்பாண பிரதிநிதி விடுக்கும் எச்சரிக்கை

கொழும்பு, டிச. 12

பாராளுமன்றக் கூட்டம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் திரு ஏ. எப். மொலமுரே தலைமையில் ஆரம்பமாயிற்று.

தேசத்தின் பொருளாதார நிலைமைபற்றியும் யூ. என். பி. அரசாங்கத்தின் பயனற்ற பண விரயங்கள்பற்றியும், புதிய வரிகளால் தனிப்பட்ட ஏகபோக ஆதிக்கத்தினை உடையோருக்கு ஏற்பட்ட பலாபலன்களைப்பற்றியும் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் தெளிவாக எடுத்துக் கூறினர் பிரிட்டனிலுள்ள ஸ்டெர்லிங் பாக்கிகள் செலவானால் இலங்கையின் பொக்கிஷம் வறண்டுவிடுமென்றும் குறைந்த விலைக்கு விளை பொருட்களைக் கொடுத்து அதிக விலைக்கு உணவுப் பொருள் வாங்கும் விசித்திரம்பற்றியும் அவர் பேசினர்.

ஆஸ்பத்திரி கண்டிராக்டர்கள் ஏராளமாகப் பணம் சம்பாதித்தது பற்றியும் அரசாங்க இலாகாக்களின் லஞ்சம் ஊழல்களை விசாரிக்க சபைக் கமிட்டி நியமிக்கவேண்டுமென்றும் பட்ஜெட தகவல்கள் வெளியானதுபற்றி விசாரணை செய்யப்படவேண்டுமென்றும் ஸ்ரீதனங்கள்மீது வரி விதிக்கப்படவேண்டுமென்றும் பல அங்கத்தினரும் பேசினர்கள்.

இலங்கை டொமினியன் அந்தஸ்தைப் பெறும் தினமாக 1948 பெப்ரவரி 4-ம் தேதி கொண்டாட்டம் நடைபெறுமென பிரதமர் பாராளுமன்றத்தில் கூறினர். நேற்று பாராளுமன்றத்தில் 1945-46 நிதி வருட ஆடிட்டர் ஜெனரல் அறிக்கை அங்கத்தினர் பார்வைக்காக சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக சபாநாயகர் தெரிவிததார்.

பாராளுமன்ற அங்கத்தினருக்காக 1945 - 46-ம் நிதிவருட ஓடிட்டர் ஜெனரலின் அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சபா நாயகர் தெரிவித்தார்.

சுதந்திர தினம்

பிரிட்டிஷார் இலங்கையின் சுதந்திரத்தைப் பற்றி அதிகார பூர்வமாக அறிவித்துள்ளனர் என்றும் இலங்கையின் சுதந்திர தினமாக எப்பொழுது கொண்டாட தீர்மானிக்கப் பட்டுள்ளதென்றும் தெரிவிக்கும்படி பிரதமரிடம் வாரியப்பொல பிரதிநிதி திரு ஐவன் தலநாயகா கேட்டபோது, 1948 பெப்ரவரி 4-ம் தேதி இலங்கை டொமினியன் அந்தஸ்தை பெற்றதற்காக கொண்டாடும் தினமாக அதிகார பூர்வமாக குறிக்கப்பட்டுள்ளதென்று பிரதமர் தெரிவித்தார்.

இதன்மேல் 1947-48 நிதி வருட பட்ஜெட் விவாதம் தொடர்ந்து நடைபெற்றது. அக்குரஸ்ஸா பிரதிநிதி திரு விக்கிரமசிங்கா தொடர்ந்து நேற்று பேசுகையில் கிராமப் பகுதிகளில் வைத்திய வசதிகள் அதிகரிக்கப் படுவதுடன் ஆங்காங்கு பயிற்சி பெற்ற வைத்திய அதிகாரிகள் முதலியோர் நியமிக்கப்பட வேண்டுமென்றும் சைக்கிள்கள் மீது வரி விதிக்கப்பட்டது நீதியான முறையல்லவென்றும் இதனால் ஏழைகள் அதிக கஷ்டப்படுவார்களென்றும் கூறினர்.

பெலியட்ட தொகுதி பிரதிநிதி திரு ராஜபக்ஸ பேசுகையில் காணியற்றோருக்கு காணி கொடுப்பதும் கிராமங்கள் விசாலிப்பிப்பதற்கும் செலவிட 50 லட்சம் ரூபாய் பட்ஜெட்டில் குறிக்கப்பட்டுள்ள தென்றும் தென் மாகாணத்தில் ஏழைகள் காணி வேண்டுமென்று கதறுகின்றனர் என்றும் அவர்களுக்கு காணிகள் வழங்கும்படியும் தொழிலாளர் சபள விஷயங்கள் பற்றியும் டிஸ்டிரிக்ட் ரஸ்தாக்கமிட்டியின் கீழ் உள்ள ரஸதாக்கள் சீர்திருத்தப்படுவது பற்றியும் பெலியட்ட தொகுதிக்கு ஜல விநியோகத் திட்டம் ஒன்று வேண்டுமென்றும் இப்பகுதியில் அதிகரித்து வரும் குற்றங்களைக் குறைக்க மந்திரி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கூறினர்.

குருணுக்கல் பிரதிநிதி திரு எச். ஸ்ரீ நிஸங்கா பேசியதாவது:-

பட்ஜெட்டை சபையில் சமர்ப்பித்து நிதி மந்திரி பேசுகையில் ஒரு புத்த சுலோகத்தையும் கூறினர். அதன் கருத்துப்படியே தாம் பட்ஜெட்டை தயாரித்திருப்பதாக அவர் தெரிவித்திருந்தார். அந்தச் சுலோகத்தில் ஒருவருடைய வருமானத்தில் நான்கில் ஒரு பங்கு பணம் தான் சுய தேவைக்கு செலவிட வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

1947-48 பட்ஜெட்டின்படி இந்நிதி வருடத்துக்கு 40 கோடி ரூபாய் வருமானம் வருமென எதிர்பார்க்கப் படுகிறது புத்தரின் போதனையில் அவர் உண்மையில் நம்புபவராக இருப்பின் இந்த நாற்பதுகோடி ரூபாயில் 10 கோடி ரூபாயை அவசியம் தேவையானோருக்கு உதவுவதற்கு சமூக சேவைச் செலவாக கொள்ளும் திட்டத்துக்காக செலவிடலாமே.

பட்ஜெட் இரகசியங்கள் வெளிவந்ததுபற்றி விசாரணை

பட்ஜெட்டை சபையில் சமர்ப்பிப்பதற்கு முன்னரே அதன் இரகசியங்கள் வெளிவந்து விட்டன. இந்த தகவல்கள் வெளிவந்ததுபற்றி விசாரணை செய்யப்பட வேண்டியது மிக அவசியம். இதற்கு இச்சபையின் கமிட்டி ஒன்றை இவ்விசாரணைக்காக அமைக்க வேண்டும்

நான் ஒரு புரட்சிக்காரனல்ல இப்பொழுதுள்ள அரசாங்கம் உலக நிலைமைக்குத் தக்கபடி நடந்துகொள்ள மாட்டாது இருப்பதாலேயே அதனை நான் எதிர்க்கிறேன். பிரிட்டிஷ மன்னரை எங்களது மன்னராக நான் ஏற்றுக்கொண்டுள்ளேன் எங்கள் நாடு ஒரு விவசாய நாடாக இருக்கிறது கைத்தொழில் முன்னேற்றமடைந்து வரும் இக்காலத்தில் அவ்விதமே இலங்கை தொடர்ந்து இருக்குமானால் பிற்போக்கு மக்களாகவே நெடுகிலும் இருக்க வேண்டி வந்துவிடும்.

இலங்கை தன் சுய தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடியதாக இருக்க வேண்டும். முக்கியமாக உணவுப் பொருள் விஷயத்தில் சுய தேவையைப் பூர்த்திசெய்ய வேண்டும். தேசத்தைக் கைத்தொழில் மயமாக்கவும் வேண்டும். இன்று இத்தேசம் ஒரு கிராமச் சந்தைபோலவேதான் இருக்கிறது. இங்குள்ள மூலப் பொருள்களை வெளி மார்க்கெட்டுகளில் விற்கும் உரிமை இருக்கவேண்டும் அப்பொழுதுதான் தேசத்தின் பொருளாதாரத்தை நிலைப்படுத்தி தேசியக் கடன்களைக் கொடுத்து முடிக்கவும் இயலும் தேசத்தினை கைத்தொழில் மயமாக்குவதற்கு வேண்டிய இயந்திர வசதிகளில்லை. இலங்கையில் ஜலசக்தி இருக்கிறது. அதனை பிரயோஜனப்படுத்தவேண்டும். ஜப்பானில் 1936-ம் வருடத்தில் 3500 நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்டங்கள் இருந்தன. இலங்கையிலோ பல வருடங்களாக ஒரு நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்டம் அமைக்கவே எவ்வளவு கஷ்டங்களைச் சமாளிக்கவேண்டியிருக்கிறது

அரசாங்க இலாகாக்களில் அனுவசியமாக செலவிடப்படுவது ஒழிக்கப்படவேண்டும் வெண்ணெய் முதலியனவற்றின்மீது விதிக்கப்பட்ட வரி தறைக்கப்படவேண்டும். நேரடியாக வரி வசூலிப்பது மேற்கொண்டும் விதிக்கப்படவேண்டும்.

அரசாங்க செலவுகள் அதிகம்

அரசாங்க உத்தியோகஸ்தரின் சம்பளத் தொகை மிகவும் அதிகமாக இருக்கிறது. சம்பள அதிகரிப்பு குறைக்கப்படவேண்டும். இத் தேசத்தின் அரசாங்கம் இதுவிஷயத்தில் அதிகம் சமாளிக்கவேண்டியிருக்கிறது. ஹைகமிஷனர்களுக்கும் வெளிநாடுகளிலுள்ள மற்றும் அதிகாரிகளுக்கும்பெருந்தொகையான சம்பளம் கொடுக்கவேண்டிவரப்போகிறது. அதற்காக இப்பொழுதே ரூ 400,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் ஸ்டெர்லிங் பாக்கிகளை உடனே பிரிட்டன் கொடுக்கவேண்டுமென்று கேட்கவேண்டும். இங்குள்ள எல்லா கம்பெனிகளும் அதிகமாக வரி செலுத்தவேண்டும். இக் கம்பெனிகளிடமிருந்து 50 சத விகித வரிகூட அறவிடப்படலாம்.

நாத்தாண்டியா பிரதிநிதி திரு அல்பர்ட் பீரிஸ் பேசியதாவது:-

'தேசச் சுதந்திரம் அடைவது மட்டும் பிரச்னைகளைத் தீர்த்துவிடமாட்டாது. தேசத்திலே லஞ்சமும் ஊழல்களும் மலிந்துவிட்டன. இவற்றை ஒழிக்கவேண்டும். எனனுடைய தொகுதியில் சுலால் இலாகா அதிகாரிகள் கள் இறக்குவோரிடம் லஞ்சம் பெறுகின்றனர். இது சம்பந்தமாக எத்தனையோபேர் என்னிடம் தெரிவித்துள்ளனர் விசாரணை நடத்தப்பட நடவடிக்கை எடுக்கவேண்டும். சாராயத்தின் விலை குறைக்கப்பட வேண்டும்.

குற்ற ஒழிப்புச் சங்கங்கள், கிராமாபிவிருத்திச் சங்கங்கள் எங்கும் ஸதாபிக்கப்படவேண்டும். 16) வீடுகளை உடைத்து திருடிய குற்றம் புரிந்த ஒருவர் இன்று ஒரு குற்ற ஒழிப்புச் சங்கத்தின் தலைவராக இருக்கிறர் எடுக்கப்படக்கூடிய பெரிய தோட்டங்களையெல்லாம் அரசாங்கம் எடுத்து காணியில்லாதவர்களுக்குக் கொடுக்கவேண்டும். இதற்காக பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையை ஒரு கோடி ரூபாயாக அதிகரிக்கவேண்டும்.கைத்தொழில்கள் அதிகரிக்கபபடவேண்டும். எனது தொகுதியிலுள்ள ரஸதாக்கள் திருத்தப்படவேண்டும். அவற்றை மராமத்து இலாகா நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரவேண்டும்.

அரசாங்க இலாகாக்களில் லஞ்சம் முதலிய ஊழல்கள் நிறைந்துள்ளன, இவற்றை விசாரித்து நடவடிக்கையெடுக்க ஒரு கமிட்டி நிறுவப்பட வேண்டும் மந்திரிமார் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து இந்த கூடாத வழக்கத்தை ஒழிக்க வேண்டும்.

ஸ்ரீதனங்கள் மீது வரி

அம்பலாங்கொடை - பலப்பிட்டியா தொகுதி அங்கததவர் திரு ஜி. எச். வில்லியம்சில்வா பேசுகையில் கூறியதாவது:-

பஸ போக்குவரததை தேசியமயமாக்கவேண்டும். இப்பொழுதுள்ள பட்ஜெட் மத்திய வகுப்பினரையும் ஏழைகளையும் வெகுவாகப் பாதிகின்றது முதலாளிகளைப் பாதிக்காத முறையில் பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது ஸ்ரீதனங்களின் மீது வரி விதிக்கவேண்டும்.

மினிப்பே பிரதிநிதி திரு எச். பி. ரம்புக்வெலா பேசுகையில் தமது தொகுதியில் உள்ள குறைகள் விரைவில் நிவர்த்திக்கப்படவேண்டுமென்றும் முக்கியமாக வைத்திய துறையில் அபிவிருத்தி அவசியமென்றும் கூறினர்.

வெளிமடை பிரதிநிதி திரு எச். டொன் சுகததாஸ பேசுகையில் உள்நாட்டு நெல் கொள்வனவுத் திட்டம் விவசாயிகளை வெகுவாகப் பாதிப்பதால் அதனை ஒழித்துவிடவேண்டுமென்றும் விவசாயிகளுக்கு காணி கொடுக்கப்படவேண்டுமென்றும் கூறினர்.

அகலவத்தை தொகுதி திரு சாம் சில்வா பேசுகையில் பட்ஜெட் தகவல்கள் வெளிவந்தது பற்றி விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் குடிவகைகள் மீது அரசாங்கம் சரியான முறைப்படி வரியை விதிக்கவில்லையென்றும் பிரிட்டன் சென்ற அதிகாரிகள், பொதுமக்களின் பணத்தை அனுவசியமாக செலவிட்டுள்ளனர் என்றும் ரயில்வே பிரயாணம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென்றும் வைத்திய வசதிகள் தமது தொகுதிக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும் ஆஸ்பத்திரிகளுக்கு உணவுப் பொருள்கள் முதலியன விநியோகிக்கும்கண்டிராக்டர்கள் பணம் ஏராளமாக சம்பாதிக்கின்றனர் என்றும் பலர் இதனால் லட்சக்கணக்கில் சம்பாதித்துள்ளனர் என்றும் உதாரணமாக ஒரு ஆஸ்பத்திரி கண்டிராக்டர் இன்று ஒரு பிரபல தினசரிப் பத்திரிகையில் ஏராளமான பங்குகள் வாங்கியுள்ளார் என்றும் கூறினர்.

தம்பதெனியா பிரதிநிதி திரு ஆர். ஜி சேனநாயக்கா பேசுகையில் தனிப்பட்டோர் மூலதனம்பற்றியும் தேச கைத்தொழில்கள்பற்றியும் கூறினர். மாலை நான்கு மணியானதால் தேனீர் இடைவேளைக்காக சபை நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டது. தேனீர் இடைவேளைக்குப்பின் அவர் தொடர்ந்து பேசிய பின் அவிசாவளை பிரதிநிதி திரு பிலிப் குணவர்தன பேசினர். அவர் பேசுகையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பற்றியும் முதலாளித்துவத்தைப்பற்றியும் தேச பொருளாதாரம் பற்றியும் பொருளாதார அபிவிருத்திக்கு தேசத்தைக் கைத்தொழில் மயமாக்க வேண்டுமென்றும் மறைமுகமான வரிகளைக் குறைத்து நேரடியான வரிகளை அதிகரிக்க வேண்டுமென்றும், நேரடி வரி மறைமுக வரி முதலியன பற்றியும் கூறினர். தொடர்ந்து அவர் பேசியதாவது:-

தேச வருமானததில் 7 கோடி 80 லட்சம் ரூபாய் நேரடி வரியாகவும் 30 கோடி ரூபாய் மறைமுக வரியாகவும் கிடைக்குமென்று பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது. இதனால் நேரடி வரி மறைமுகவரியிலும் பார்க்க 75 சத விகிதம் குறைவாக உள்ளது. மத்திய வகுப்பினரும் ஏழைகளும்தான் இந்த அதிகரித்த வரியினால் பாதிக்கப்படப் போகிறர்கள்.

பட்ஜெட், சபையில் வெளியிடப்படுமுன் அதன் தகவல்கள் வெளிவந்துள்ளன. அத்தகவல்கள்பத்திரிகையிலும்வெளிவந்துள்ளன. வர்த்தக ஸ்தாபனங்கள் ஏராளமாக பொருள்களை இருப்பில் வைக்க இது உதவியுள்ளது. பட்ஜெட் பிரசங்கம் இங்கு நடக்க, வர்த்தகர்கள் அங்கு விலையைக் கூட்டிவிட்டனர். இது விஷயத்தில் முழு விசாரணை நடத்தப்பட வேண்டும்.

தீர்மானம் கொண்டுவரப்படும்

பட்ஜெட் விவாதம் முடிந்ததும் பட்ஜெட் தகவல்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

அரசாங்க இலாகாக்களின் தற்காலிக குமாஸ்தாக்கள்

வேலை நீக்க சுற்றறிக்கை பற்றி பிரதிநிதிகள் சபையில் டாக்டர் பெரேராவின் கேள்வி

கொழும்பு, டிச 12

பாராளுமன்றக் கூட்டம் நேற்று பிற்பகல் 1 மணிக்கு சபாநாயகர் திரு. ஏ எப். மொலமுரே தலைமையில் ஆரம்பமானது. டாக்டர் என். எம் பெரேரா போக்கு வரத்து மந்திரியைக் கேட்டிருந்த கேள்விகளாவன:-

1. (அ) ஜனுவரி முதல் தேதி தொடக்கம இதுவரை மின்சார வெளிச்சம் வேண்டுமென்று கோரி விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் எத்தனை நிராகரிக்கப்பட்டுள்ளன?

(ஆ) இவற்றில் வர்த்தக சம்பந்தமான விண்ணப்பஙகள் எத்தனை?

(இ) வீட்டு உபயோக சம்பந்தமான விண்ணப்பஙகள் எத்தனை?

(ஈ) இந்தக் கால எல்லைக்குள் எத்தனை இடங்களுக்கு புதிதாக மின்சார வெளிச்ச தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன?

(உ) இவற்றில் வர்த்தக தொடர்புள்ளவை எத்தனை?

(ஊ) இவற்றில் வீட்டு உபயோகத்துக்கு எத்தனை?

போக்கு வரத்து மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. அபய க்கிரமா இவற்றுக்கு பதிலளிக்கையில் கூறியதாவது:-

(அ) ஜனுவரி முதல் தேதி தொடக்கம் இதுவரையும் மின்சார வெளிச்சம் வேண்டுமென்று கோரி வந்த விண்ணப்பங்களெதுவும் நிராகரிக்கப்படவில்லை வீட்டு உபயோகங்களுக்காக விண்ணப்பம் செய்தவர்களெல்லோருக்கும் அவரவர் விண்ணப்பங்கள் வந்த ஒழுங்கு வரிசைப்படி பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக விண்ணப்பதாரர்களுக்கு அறிக்கப்பட்டுள்ளது. மின்சார வெளிச்சம் வசதிக்குத் தக்கபடி ஏற்படுத்திக் கொடுக்கப்படும்; இதுவரை 1011 பேர் இந்த முறையில் விண்ணப்பித்துள்ளனர்

(ஆ) 521. (இ) 490. (ஈ) 266 (உ) 44. (ஊ) 222.

மேற்கொண்டு டாக்டர் பெரேரா பல உப கேள்விகளைக் கேட்டார். இவற்றினை முன்கூட்டியே தெரிவிக்கவேண்டுமென்றும் பின்னரே பதில்கள் கொடுக்க முடியுமென்றும் போக்கு வரத்து மந்திரியின் பாராளுமன்றக்காரியதரிசி தெரிவித்தார்.

2. நிதி மந்திரி திரு. ஜே. ஆர் ஜயவர்தனவிடம் டாக்டர் பெரேரா கீழ்க்கண்ட ஒரு கேள்விக்கு பதிலளிக்கும்படி கேட்டார்,

(அ) தற்காலிக குமாஸ்தாக்கள் சம்பந்தமாக அரசாங்க இலாக்காக்களின் தலைவர்களுக்கு விடுக்கப்பட்ட சுற்றறிக்கையிலுள்ள நிபந்தனைகள் என்ன?

(ஆ) தற்காலிக குமாஸதாக்களில் சிலரை விலக்குவது அல்லது எல்லோரையும் விலக்குவது சம்பந்தமான சுற்றறிக்கையா?

(இ) இது சம்பந்தமாக ஏதும் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமுன் சபையின் ஆலோசனையையும் கேட்டுச் செய்யப்படுமா?

இக் கேள்விக்கு நிதி மந்திரி திரு ஜே. ஆர். ஜயவர்தன பதிலளித்ததாவது:-

[அ] பொது அரசாங்க குமாஸதாக்களாகவோ உதவி அரசாங்க குமாஸதாக்களாகவோ சேர்த்துக்கொள்ள முடியாதவர்கள் என்று கருதப்படுவோருக்கும் அரசாங்க இலாகாவின் தேவைகளுக்கும் நிர்வாகத்துக்கும் குந்தகம் விளைக்காத முறையில் ஏற்பாடுகள் செய்துகொண்டு அவர்களுக்கு வேலையிலிருந்து விலக்கப்படும் அறிவித்தலைக் காலவரை குறித்துக் கொடுக்குமாறு அரசாங்க இலாகா தலைவர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தற்காலிகமாக வேலை செய்யும் உத்தியோகஸதர் மாதச் சம்பளம் பெறுபவராக இருப்பினும் அன்றி தினசரிச் சம்பளம் பெறுபவராக இருப்பினும் சரி எல்லோருக்கும் ஒரு மாத அறிவித்தல் கொடுத்தே விலக்கப்பட வேண்டுமென்றும் அப்படி விலக்கப்படுவோரது பெயர்களை சமீபத்தில் உள்ள வேலை தேடிக் கொடுக்கும் ஸ்தாபனத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டு மென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரே இலாகாவில் உள்ள பல உத்தியோகஸ்தர்கள் விலத்தப்பட வேண்டியிருப்பின் முதலில் கொடுக்கப்பட்டவேலைகளை சரிவரச் செய்யமாட்டாது இருக்கும் குமாஸ்தாக்களே விலத்தப்பட அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்த சுற்றறிக்கை தற்காலிகமாக அரசாங்க வேலைகளைக் கவனிப்பதற்காக எடுக்கப்பட்டு இப்பொழுது அவ்வேலைகள் முடிந்த பின்னும் அதே இலாகாக்களில் இருக்கும் குமாஸதாக்கள் சம்பந்தமாகவே இருக்கிறது.

(இ) தற்காலிகமாக எடுக்கப்பட்டிருந்தோருக்கு வேலை கொடுக்க இல்லாதவிடத்து அவர்களை விலக்குவது சாதாரண நடவடிக்கைதான். இதனைத் தான் செய்யும்படி சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது. சபையில் ஆலோசித்து இதனைச் செய்ய வேண்டுமென்பதற்கு இது முக்கியமான விஷயமாகக் காணப்படவில்லை

டாக்டர் என். எம். பெரேரா கண்டிப் பகுதியில் சமீப வெள்ளப் பெருக்கினால் சொத்துக்களை இழந்த அகதிகளின் மனுவொன்றை சமர்ப்பித்து கூறியதாவது :-

'கண்டிப்பகுதியில் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட 75 பேர்களால் கைச்சாத்திடப்பட்ட மனுவொன்றைச் சமர்ப்பிக்கின்றேன். வெள்ளப் பெருக்கினால் அவர்களுக்கு ஏற்பட்ட சேதங்கள், அழிந்த வீடுகள், பயிர் வகைகள் மற்றும் பொருள்கள் ஆகியனவுக்கு அவர்கள் நஷ்டஈடு தரும்படி கோருகின்றனர்."

விளம்பரம்

வெள்ளவத்தை - பம்பலப்பிட்டி பகுதிகளில் ஒவ்வொரு வீடுகளுக்கும் 'சுதந்திரன்' பத்திரிகை ஆள் மூலம் தினசரி கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்திருக்கிறபடியால் தேவையானோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு மனுச்செய்யவும்.

சந்தா பின்வருமாறு:-

1	மாதம்	ரூ. 2-00
3	மாதம்	ரூ. 6-00
6	மாதம்	ரூ. 12-00
12	மாதம்	ரூ. 24-00

மானேஜர்,
'சுதந்திரன்',
194 A, தட்டாரத் தெரு,
கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 A, தட்டாரத் தெரு. கொழும்பு.
போன்: 3611.

சர்வஜித்து௵ கார்த்திகை மீ 28உ
சனிக்கிழமை

இந்திய உறவுக்கு “சீதாதேவி” தூது

இலங்கை அரசாங்கத்தால் நடத்தப்படும் இலங்கை இந்திய விமானப் போக்குவரத்து தொடங்கப்பட்டு விட்டது. முதலாவது விமானம் சென்ற வியாழக்கிழமை பறந்துள்ளது. அதன் பெயர் “சீதாதேவி.” அவ்விமானத்தில் பிரயாணஞ் செய்தவர்களில் முக்கியமானவர் எங்கள் போக்குவரத்து மந்திரியாகிய கர்னல் கொத்தலாவலையாவர்.

சீதை என்னும் பெயர் இலங்கையிலும் இந்தியாவிலும் புராண காலந்தொட்டு வழங்கப்படும் புனிதமான பெயராகும். புராணகாலச் சீதையைப் புத்தியற்ற இராவணன் விமானத்தில் இலங்கைக்குக் கொண்டுவந்தான். ஆனால் வியாழக்கிழமை இந்தியாவுக்குச் சென்ற சீதை விமானமோ புத்திவந்த இராவணனின் செயலை குறிப்பதுபோன்று இருக்கின்றது. புத்தியற்ற இராவணனால் இலங்கை அழிந்தது. புத்தியுள்ள புதிய இராவணன் பணத்தைச் சம்பாதிக்க இடமுண்டு. இலங்கை இந்திய ஒற்றுமையும் ஏற்பட வழியும் உண்டு. அப்படித்தான் அவரின் முதலாவது பிரயாணத்தையிட்டு நாம் எண்ணிக்கொள்ள இடமுண்டு.

கர்னல் கொத்தலாவலையைச் சென்னை விமான நிலையத்தில் சந்தித்த பத்திரிகா நிருபர்கள் அவரைப் பல கேள்விகள் கேட்டார்கள். “இந்திய யூனியன் அரசாங்கம், பர்மா மலேயா முதலிய நாடுகளுடன் சேர்ந்து தென் கிழக்கு ஆசிய சமஷ்டி அரசாங்கத்தை ஏற்படுத்தினால் இலங்கை அதில் சேர்ந்துகொள்ளுமா?” என்பது அவற்றில் ஒரு கேள்வி. இதற்குப் பதிலளித்தபோது மந்திரியார் அதையிட்டு இலங்கை அரசாங்கம் ஆலோசனை செய்யவே செய்யும் என்று கூறியுள்ளார்.

இலங்கை இந்திய ஒற்றுமைப் பேச்சுக்கள் டிசம்பர் மாதம் 23-ம தேதி புதுடில்லியில் நடைபெற விருக்கின்றன. அதற்கு முன்பதாக இக்கேள்வியைப் போட்டுள்ள பத்திரிகா நிருபருக்கு நாம் வாயில் வெல்லம் இடவேண்டும்.

இந்தியாவுடன் சேர்ந்து ஒரு சமஷ்டி அரசியலை தென்கிழக்கு ஆசியாவில் ஏற்படுத்திக் கொள்ள பர்மா, மலேயா முதலிய நாடுகள் சம்மதிக்கத்தான் செய்வர். அவ்விசயம் அவர்கள் சம்மதித்தால் இந்தியாவின் பலம் பன்மடங்கு அதிகரித்து விடும். பலம் பொருந்திய இந்தியாவுடன் பகைத்துத் தனியேவாழ இலங்கை மக்கள் விரும்புவார்களா? ஒருபோதும் விரும்பமாட்டார்கள். ஆகவே இச்சந்தர்ப்பத்தை முன்னிட்டாவது திரு. சேனநாயக்கா இந்தியாவுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

கர்னல் கொத்தலாவலையின் முதற் பிரயாணம் இத்தகைய நட்பை ஏற்படுத்த வழிகோலியுள்ளது. ஆகவே அவரும் மற்றும் மந்திரிகளும் தொடர்ந்து பிரயாணஞ் செய்தால் ஒரு நிரந்தரமான உறவு உண்டாகி விடுவது நிச்சயம். கர்னல் கொத்தலாவலைக்கும் மற்றும் மந்திரிகளுக்கும் இந்த யோசனையை நாம் சமர்ப்பிக்கிறோம்.

கைலஞ்ச வழக்கு

உணவுக்கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர்களுக்கு

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது

நீர்கொழும்பு, டிச 12

“இந்த வழக்கையிட்டு இந்நீதிஸ்தலம் மிகவும் பாரதூரமாகக் கருதவேண்டும். அரசாங்க சேவையில், பொதுஜன நன்மையின் பேரால் கைலஞ்சம், நிர்வாக ஊழல் முதலியனவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படல் வேண்டும். இந்த மாதிரியான குற்றச்சாட்டுகளை ருசுப்படுத்துவது மிகவும் கடினம். ஆனால் ஒரு முறை ருசுப்படுத்தப்பட்டால் குற்றவாளிகள் தக்கவாறு தண்டிக்கப்படல்வேண்டும்” இவ்வாறு நீர்கொழும்பு டிஸ்டிரிக்ட் நீதிபதி திரு. எல் பி டி. சில்வா நீர்கொழும்பு கைலஞ்ச வழக்கில் தீர்ப்பளிக்கும்போது கூறினார்.

இவ் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் நீர்கொழும்பு உணவு விலைக் கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர் வி. டி. வீரசிங்கம்; உணவு கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர் ஜி கே. ஈ டிசில்வா; குருணாக்கல் விலைக் கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர் ஓ. ஈ. பெரேரா ஆகிய மூவருமாவர்.

இம் மூவர் மீதும் மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. மூவரும் சதியாலோசனை செய்து நீர்கொழும்பு, டெம்பிள் வீதியிலுள்ள ஒரு கடைக்காரனிடமிருந்து சென்ற 1946-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ந் தேதி ரூபா 60”தை அக்கடைக்காரனின் சிப்பந்தி ஒருவன் 2 ரூபாவிற்கு விற்கவேண்டிய முகப்பவுடர் டின் ஒன்றை ரூபா 2-25 க்கு விற்ற குற்றச்சாட்டில் வழக்குத் தொடராவண்ணம் பெற்றதென்பது தான் குற்றச்சாட்டுகளாகும்.

வழக்காளி தரப்புச் சாட்சியம் பின்வருமாறு:—

இவர்கள் கைலஞ்சம் கேட்டபொழுது கடைக்காரனுகிய ஜினதாசாவும் அவரின் மூத்த தமையனுராகிய ஒஸ்டின் டீ சில்வாவும் அவர்களுடைய வழக்கறிஞராகிய திரு கிறேசரி டீ. சொய்ஸாவைச் சந்தித்து அவருக்கு நிலைமையை விளங்கப்படுத்தினார்கள். திரு சொய்ஸா ஒரு சதமும் கைலஞ்சம் கொடுக்க வேண்டாமென்று அவர்களுக்குப் புத்திமதி கூறிப் பின்பு அவர்களைக் கூட்டிக்கொண்டு நீர்கொழும்பு உதவி போலிஸ் சுபரின்டென்டன் திரு எச்.கே வன்டென்ரீசனைக் கண்டார்.

திரு வன்டென்ரீசன் இன்ஸ்பெக்டர் டானியலை இவர்களைத் தந்திரமாகப் பிடிக்கும்படி ஆலோசனை செய்தார். அப்படியே இவர்கள் வாங்கிய ரூபாய் 600 உடன் பிடிக்கப்பட்டார்கள்.

மூன்றுவது எதிரி சாட்சியத்தில் ஜினதாசாவைத் தமக்குத் தெரியுமென்றும் அவர் தம்மைப் பாதுகாக்கும் வண்ணம் கேட்டதாகவும் சொன்னார். தாம் இப்படி இரண்டு முறை மறுத்தும் மூன்றுவது தடவையில் தம்முடைய பொக்கட்டில் ஜினதாசா காசை வைத்ததாகவும் அப்பொழுது இன்ஸ்பெக்டர் டானியலும் வேறு போலிஸ்காரரும் ஆங்கு வந்து தம்மைப் பிடித்ததாகவும் சொன்னார்.

முதலாம் இரண்டாம் எதிரிகள் தாம் கைலஞ்சம் வாங்கவுமில்லை; அப்படி வாங்குவதற்குச் சதியாலோசனை செய்யவுமில்லை என்று கூறினார்கள்.

மூவரையும் குற்றவாளியாக நீதிபதி கண்டு தலா ஒரு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

மூவரும் அப்பீல் செய்து கொள்ளுவதற்கு மனுச் செய்திருக்கிறார்கள்.

வட-இலங்கைத் தீவக சமாசம்

கொழும்பு, டிச, 13

நாளை 14-12-47 ஞாயிற்றுக்கிழமை மாலை 2-30 மணிக்கு கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில், வட இலங்கை சமாசம் நிறுவுவதன் பொருட்டு ஓர் மகாநாடு கூட்டப்படுமென்று அறியப்படுகிறது. இச்சமாசத்தின் நோக்கங்கள் அரசியல் கலப்பற்றதெனக் கூட்டத்தைக் கூட்டும் காரியதரிசி அறிவிக்கிறார்.

ஜப்பானுக்கு 6 கோடி பவுண் கடன்

இந்திய பாங்குகளும் பிரிட்டிஷ்பாங்குகளும் கொடுக்கும்

நியூயார்க், டிச 10

ஜப்பான் பகுதி வாங்குவதற்கு அமெரிக்க வர்த்தகர் போட்டுவரும் திட்டம் முறிந்தால் பிரிட்டிஷ் பாங்குகளும் இந்திய பாங்குகளும் சேர்ந்து ஜப்பானுக்கு 6 கோடி பவுண் கடன் கொடுக்கும். இதனால் ஜப்பானின் நாணயப் பரிவர்த்தனை கஷ்டமின்றி அந்நியநாட்டு வர்த்தகத்தை நடத்தவும் ஜப்பானின் பொருளாதார நிலைமையைசரிபடுத்தவும் முடியும். இந்தியாவிலிருந்து உப்பு, பருத்தி, கம்பளம் இறக்குமதி செய்வதில் ஏற்படும் லாபத்தைக் கொண்டு ஜப்பான் கைத்தொழில் அபிவிருத்தி செய்யமுடியும்.

ஹாங்காங்ஷாங்காய் பாங்கைச் சேர்ந்த ஹென்றி ஷராடரும் சில இந்திய பாங்கு முதலாளிகளும் ஜப்பானுக்கு கடன் கொடுக்கும் இத்திட்டத்தைப்பற்றி ஆலோசித்து வருகிறார்கள்.

ரோமிலும் வேலை நிறுத்தம்

கிறிஸ்மஸ் பண்டிகைக்கு பண உதவி கோருகிறார்கள்

ரோம், டிச 11

கிறிஸ்மஸ் விடுமுறை காலத்தில் வேலையற்றோருக்கு விசேட பண உதவி கோரியதை இத்தாலிய அரசாங்கத்தார் நிராகரித்தபடியால ரோமிலுள்ள 6 லட்சம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். இதைவிட 5 கோடி பவுண் செலவில் தங்களுக்கு பொது வசதிகளளிக்கும்படியும கேட்டிருந்தனர். ரோமில் இத்தகைய பண உதவி செய்தால இத்தாலி தேசம் முழுவதுமுள்ள வேலையற்றோருக்கு உதவி செய்ய வேண்டிவருமென்பதால்தான் அரசாங்கத்தார் இக்கோரிக்கைக்கிணங்கவில்லை.

சில அரசாங்கக் கந்தோர்கள் வழக்கம்போல் கடமையாற்றுகிறன. தடைசெய்வோரில் 6 பேர் போலிசாரால் பிடிபட்டிருக்கின்றனர். [ராய்ட்டர்]

ஆங்கிலோ-சோவியத் வர்த்தக ஒப்பந்தம்

கானடா பேச்சு முறிவு

லண்டன், டிச. 12

மாஸ்கோவில் நடைபெற்றுவரும் சமரசப் பேச்சால் இன்னும் 10 தினங்களுக்குள் நெடுநாட்களாக முடிவுறுதிருந்த ஆங்கிலோ-சோவியத வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டுவிடும்.

ஆனால் ஒட்டாவா நகரில் பிரிட்டன் கானடாவுடன் நடத்திவரும் வர்த்தக ஒப்பந்தப் பேச்சு முறிந்துவிட்டது.

பிரிட்டனுக்கும் யூகோஸ்லவியாவுக்கும் நடைபெற்றுவரும் வர்த்தக சமரசப் பேச்சில் எல்லா அம்சங்களிலும சமரசம் ஏற்பட்டுவிட்டது. யந்திரங்களைப் பிரிட்டனும் அனுப்பும் தேதி குறிப்பிட முடியாதிருப்பதால் அது சம்பந்தமாக இன்னும் சமரசப் பேச்சு ஏற்படவில்லை. (ராய்ட்டர்)

காலில் சிக்கிய மலைப்பாம்பு

காட்சிச்சாலைக்கனுப்பி வைத்தான்

ஜாயெலை, டிச 13

பழனுகமத்துக்குச் சமீபம் உள்ள ஒரு குளத்திற்கு மீன் பிடிக்கச் சென்ற சைமனின் காலில் ஒரு மலைப்பாம்பு சுற்றிக் கொண்டது. அதன் நீளம் எட்டடி என்று தெரிகிறது. சைமன் பதறவில்லை. மெல்ல அதனைக் கைப்பற்றிவிட்டான். இப்போது அம்மலைப்பாம்பு தெஹிவளையில் உள்ள மிருகக் காட்சிச் சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தியா-தென்கிழக்கு ஆசிய சமஷ்டியில் இலங்கை சேருமா?

சென்னை நிருபரிடம் “சீதாதேவி”யில் சென்றமந்திரிகொத்தலாவல அளித்தபதில்

கோடிக்கரை-யாழ்ப்பாண கப்பல் வர்த்தகத்திற்கு ஏற்பாடு

கொச்சித் துறைமுகத்தைப் பெரிய கடற்படைத் தளமாக்க 4 கோடி ரூபாய்த் திட்டம்

சென்னை, டிச. 11

இலங்கை அரசாங்கம் இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்குமிடையே ஆரம்பித்துள்ள விமானப் போக்குவரத்தை ஆரம்பித்து வைக்கு முகத்தான் இன்று காலை கொழும்பிலிருந்து புறப்பட்ட “சீதா தேவி” என்ற விமானத்தில் இலங்கை அரசாங்கத்தின் போக்குவரத்து மந்திரி திரு. ஜே. எல் கொத்தலாவலையும், சில அதிகாரிகளும், யூ. என். பி. அரசாங்கத்தை ஆதரிக்கும் சில பத்திரிகைப் பிரதிநிதிகளும் சென்னை வந்து இன்று பிற்பகல் கொழும்புக்குத் திரும்பினர்.

“சீதா தேவி” கொண்டு வந்த மந்திரி கொத்தலாவலையை சென்னை பத்திரிகா நிருபர் பேட்டி கண்டு ஆசிய சமஷ்டி ஏற்பட்டால் அதில் இலங்கை சேருமா? என்று கேட்ட கேள்விக்கு மந்திரி பின்வருமாறு பதிலளித்தார்:-

“எதிர்காலத்தில் நிலைமைகள் திருப்திகரமாக உருவானால் பர்மா, மலேயா முதலிய நாடுகளை ஐக்கியப்படுத்தும் தென் கிழக்கு ஆசிய யூனியனை ஏற்படுத்தி இந்திய யூனியனும் தென் கிழக்கு ஆசிய நாடுகளும் இணைக்கப்படும் சமஷ்டியில இலங்கையும சேருவதைக் குறித்து ஆலோசனை செய்வோம். கூடிய சீக்கிரம் இலங்கை பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயக்கா டில்லியில் இந்தியா பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேருவைச் சந்தித்துப் பேசும்போது இலங்கை இந்தியர் பிரச்னை திருப்திகரமாகத் தீர்க்கப்படுமென்று நம்புகிறேன்.”

இலங்கை சுதந்திரம் பெற்றபின் இலங்கையில் பிரிட்டனுக்கு ராணுவத தளங்களை கொடுக்க ஒப்புக் கொண்டிருப்பதால இலங்கை பிரிட்டனிடம் சரண் புகுந்திருப்பதாகக் கருதப்படுமல்லவா? என்று நிருபர் கேட்டதற்கு மந்திரி பின்வருமாறு பதிலளித்தார்:-“இது விஷயத்தைப்பற்றி பிரிட்டிஷ சர்க்கார் இலங்கை சர்க்காரைக் கலந்து ஆலோசனை செய்தார்கள். இருநாடுகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள பரஸ்பர ஒப்பந்தத்தின் பேரில்தான் இலங்கையில் பிரிட்டனுக்கு தளங்கள் கொடுக்க ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இலங்கை விரும்பாத ஒரு விஷயத்தை பலவந்தத்தின் மூலம் இலங்கை ஒப்புக்கொள்ளவில்லை.

கூட்டுறவுப் பண்டகசாலையில் களவு

ரூ. 2000 பெறுமதியான ஜவுளிகள் மறைந்தன

கொழும்பு, டிச. 13

கொலன்னாவை வீதியில் உள்ள ஓர் கூட்டுறவுப் பண்டகசாலை கொள்ளையிடப் பட்டதாக நேற்றுக்காலை போலிசாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

ரூபா 2000 த்திற்கு அதிக பெறுமதியான புடவை வகைகள் களவாடப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

கோடிக்கரை - யாழ்ப்பாண கடல்பாதை

சென்னை, டிச. 11

இன்று சென்னை பாராளுமன்றத்தில் பராமத்து மந்திரி பின்வருமாறு தெரிவித்தார்:-

சென்னை மாகாணத்திலுள்ள 35 சிறிய துறைமுகங்களில் 29 துறைமுகங்கள் அந்நிய நாடுகளுடன கப்பல்வர்த்தகம் நடத்த திறக்கப்பட்டிருக்கின்றன. கோடிக்கரைத் துறைமுகத்துக்கும், யாழ்ப்பாணம், தென்னிலங்கைக்கும் பிரயாணிகளின் போக்குவரத்தும் வர்த்தகப் போக்குவரத்தும் நடத்த கோடிக்கரைத் துறைமுகத்தைத்திறந்துவிடும்படி சென்னை சர்க்கார் இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆயுதப் போலிஸ்படையில் முஸ்லிம்களுக்கு அனுமதியில்லை

சென்னை, டிச. 11

சென்னை மாகாணத்தில் புதிதாகத் திரட்டப்படப் போகும் ஆயுதப் போலிஸ்படையில் முஸ்லிம்களைச் சேர்க்கலாகாதென்று சென்னை சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள் என்று இன்று உள்நாட்டு மந்திரி சென்னை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ராஜாஜி 70-வது பிறந்த நாள் கொண்டாட்டம்

சென்னை, டிச 11

ராஜாஜியின் 70-வது பிறந்த நாள்கொண்டாட்டம் சென்னையில் அதிவிமரிசையாக நடைபெற்றது.

சென்னை பிரதம மந்திரி திரு. ராமசாமி ரெட்டியார் தலைமையில் சர்க்கார் மாளிகை மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் சென்னை ஷெரிப் திரு எஸ். ராமசாமி நாயுடு, சென்னை பாராளுமன்றத் தலைவர் திரு. ஜே. சிவஷண்முகம் பிள்ளை, சென்னை சர்வகலாசாலை உப அத்யட்சகர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், திரு. சி. ஆர். சீனிவாசன், திரு டி. ஆர். வெங்கடராம சாஸ்திரி, திரு. புலுசு சாம்பமூர்த்தி, திரு. வி. பாஷ்யம் ஐயங்கார், திரு. சி. என். முத்துரங்க முதலியார், திரு. ஆர். சூரியநாராயணராவ், சென்னை மேஜர் டாக்டர். யு. கிருஷ்ணராவ், ஜனுப் அல்லபிச்சை, திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீமதி, ஏ. வி. குட்டிமாலு அம்மாள் முதலியோர் ராஜாஜியின் தேசசேவையைப் பாராட்டிப் பேசினார்கள். ஐக்கிய மாகாண பிரதம மந்திரி பண்டிட் பந்த் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

கைத்தறி ஜவுளி கட்டுப்பாடு ஒழிந்தது

சென்னை, டிச 11

1947-ம் வருடத்திய கைத்தறி ஜவுளி, கைத்தறி ஜவுளி உற்பத்தி கட்டுப்பாட்டுச் சட்டங்களை சென்னை சர்க்கார் ரத்து செய்துவிட்டார்கள். இருப்பிலுள்ள சில ரக கைத்தறி ஜவுளிகளை தற்காலிகமாக ஏற்றுமதி செய்துவிட ஏற்பாடு செய்துள்ளார்கள்.

உணவுக் கட்டுப்பாடும் நீக்கப்படும்

உணவுக் கட்டுப்பாட்டை சென்னை சர்க்கார் படிப்படியாக நீக்கிவிட தீர்மானித்திருக்கின்றனர். முதலாவது சீடட் ஜில்லாக்கள், பெல்லாரி அனந்தப்பூர், கர்நூல், கடப்பை ஜில்லாக்களில் கிராமாந்தரங்களில் கட்டுப்பாட்டையும் பங்கீட்டையும் ரத்து செய்கிறார்கள். அடுத்தபடியாக கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், தஞ்சாவூர், நெல்லூர், திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு ஜில்லாக்களில் நீக்கிவிடுவார்கள். மூன்றுவது படியாக மாகாண முழுதும் கட்டுப்பாடு நீக்கப்பட்டுவிடும்.

கொச்சி கடற்படைத் தளம்

எர்ணுகுளம், டிச. 11

கொச்சியை முதல்தரமான கடற்படை தளமாக அபிவிருத்தி செய்ய இந்திய சர்க்கார் 4 கோடி ரூபாய் திட்டம் போட்டிருக்கிறார்கள். இந்தியர் கடற்படைப் பயிற்சி அளிப்பதற்கு வசதிகள் செய்யப்படும். ஜனவரி மாதம் முதல் வேலை ஆரம்பமாகும். முதல்படியாக 20 லட்ச ரூபாய் செலவில் அபிவிருத்தி வேலைகள் நடைபெறும். எற்கெனவே ராணுவ எஞ்சினீயரிங் சர்வீசின் இரு பகுதிகள் கொச்சிக்குச் சென்றிருக்கின்றன. கடற்படைப் பயிற்சிக் கல்லூரிகள் அமைக்கப்படும்.

பண்டித நேரு லண்டன் செல்வாரா?

புதுடில்லி, டிச. 11

பண்டித நேருவுக்கு இந்த மாதமும் ஜனவரி மாதமும் அலுவல்கள் அதிகமிருக்கின்றன. அநேக கமிட்டிகளின் கூட்டங்களில் அவர் கலந்து கொள்ள வேண்டியதாகவிருக்கிறது. வசதி ஏற்படும்போது அவர் லண்டனுக்கு விஜயம் செய்வதாக பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்குத் தெரிவித்திருக்கிறார்.

இந்திய பொருளாதாரத் திட்டம் வகுக்க பண்டித நேரு தலைமையில் அகில இந்திய காங்கிரஸ் நியமித்துள்ள கமிட்டியில் கே. சி. குமரப்பா, குல்ஸாரிலால் நந்தா, என். ஜி. ரங்கா, மௌலானா அபுல்கலாம் ஆசாத், ஜெயப்பிரகாஷ் நாராயண், அச்சுத பட்டவர்த்தன, சங்கர ராவ் தேவ் ஆகியோர் அங்கத்தினர்கள்.

டில்லியிலிறங்கும் விமானங்களுக்கு சுங்கம்

டில்லி விமான நிலையம் சுங்க இலாக்கா பரிசோதனை நடைபெறும் விமான நிலையமாகிவிட்டது. அந்நிய விமானங்கள் டில்லி வழியாகச் செல்லும்போது இறங்கி பரிசோதனைக்குட்படவேண்டும். சாமான்களுக்கு சுங்கவரிவிதிக்கப்படும். இந்திய பருத்தி வரிச்சட்டத் திருத்த மசோதா, மந்திரிகள் சம்பள மசோதா, அறவைச் சக்கரங்கள், டின்பழ கைத்தொழில் பாதுகாப்பு வரி மசோதா ஆகியவை இந்தியா பாராளுமன்றத்தில் நிறைவேறி விட்டன.

இந்தியதேயிலை வரிச் சட்டத்தை மேலும் 5 வருடம் நீடிடிக்கவும், சர்வ தேச தேயிலை ஒப்பந்தத்தை மேலும் நீடிக்கவும், சர்வதேசங்களில் தேயிலைப் பிரசாரம செய்யவும் கல்கத்தாவில் நடைபெற்றதேயிலை மகாநாடு தீர்மானித்தது.

ஜனங்கள் எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தியதால் கல்கத்தாவில் மேற்கு வங்க பாராளுமன்றத்தில் விவாதிக்கப் பட்ட விசேஷ பாதுகாப்பு அதிகார மசோதா ஜனுவரி 8-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பணம் வேண்டாம் யந்திரங்கள் வேண்டும்

நியூயார்க், டிச. 11

மசசுசட்ஸ் மாகாணத்திலுள்ள ஹார்வார்ட் சர்வ கலாசாலைக்கு இந்திய ஸ்தானிகர் ஆசப் அலி விஜயம் செய்தார். அப்பொழுது அவர் பத்திரிகா நிருபரிடம் பேசியபோது, “இந்தியாவுக்குப்பணம்தேவையில்லை. யந்திரங்கள்தான் வாங்கவேண்டும்” என்றார்.

நியூயார்க்கில் “சகுந்தலா”

சாந்தாராம் தயாரித்ததும் அவரது மனைவி ஜெயஸ்ரீ நடித்ததுமான “சகுந்தலா” சினிமாப் படம் கிறிஸ்மஸ் தினத்திலிருந்து இங்கு காண்பிக்கப்படும்.

இந்திய-ஆப்கானிய உறவு

புதுடில்லி, டிச. 11

இந்தியாவுக்கும் ஆப்கானிஸ்தானத்திற்குமுள்ள நேசபான்மையை மேலும் அதிகரிக்க இரு சர்க்கார்களும பரஸ்பரம் ஸ்தானிகர்களை மாற்றிக்கொள்ளும்.

அழகப்ப செட்டியாருக்கு அழைப்பு

டில்லியில் நடைபெறும் கைத்தொழில் மகாநாட்டுக்கு டாக்டர் அழகப்ப செட்டியாரை இந்திய சர்க்கார் அழைத்திருக்கின்றனர்.

இந்தியா-அமெரிக்கா உடன்படிக்கை

பம்பாய், டிச 11

இந்தியாவும் அமெரிக்காவும் நேச உடன் படிக்கை செய்து கொள்வது பற்றி டில்லியில் இருவாரங்களாக பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக அமெரிக்க ஸ்தானிகர் டாக்டர். கிராடி தெரிவித்தார்.

இலங்கைக்கு பிரிட்டிஷ் ஹை கமிஷனர்

திரு. ஹங்கிங்ஸன் ஜனவரியில் இலங்கை வருவார்

கொழும்பு, டிச. 13

இலங்கைக்குப் புதிய அரசியல் அந்தஸ்து கிடைத்ததும் பிரிட்டிஷ அரசாங்கத்தின் சார்பில் இலங்கையில் திரு. வால்டர் குரூஸ் பீல்ட் ஹங்கிங்ஸன் என்பவர் ஹைக்கமிஷனராக நியமிக்கப்படுவார் என்று தெரிகிறது. இவர் ஜனவரியில் இலங்கை வந்து சேர்வார் என்று அறியப்படுகிறது. இந்நியமனம் பற்றி லண்டனில் உள்ள சாம்ராஜ்ய தொடர்புக் காரியாலயம் பிரகடனம் செய்துள்ளது.

திரு ஹங்கிங்ஸன் 1894-ம் ஆண்டு பிறந்தார். மான்செஸ்டர் இலக்கணப் பாடசாலையிலும், ஆக்ஸ்போர்ட் யேசுகல்லூரியிலும கல்விபயின்றார். 1914-18ல நடந்த மகா யுத்தத்தில்பங்குபற்றிராணுவச் சிலுவை பரிசு பெற்றார் 1925ல் குடியேற்றநாட்டுக்காரியாலயத்தில்சேர்ந்து கடமை ஆற்றத் தொடங்கினார். 1931,1935ஆகிய இரு வருடங்களிலும் ஆஸ்தரேலியாவில் பிரிட்டிஷ பிரதிநிதியாகச் சேவை புரிந்தார். 1937ம் கும 39க்கும் இடையில் சாம்ராஜ்ய அலுவல்கள் சம்பந்தமான அரசாங்கக் காரியதரிசிகளுக்கு அந்தரங்கக் காரியதரிசியாக விளங்கினார். 1939ல் கானடாவில் பிரிட்டிஷ ஹை கமிஷனரின் பிரதம காரியதரிசியாகக் கடமைபுரிந்தார். 1941ல் அயர்லந்தில் பிரிட்டிஷ பிரதிநிதியின காரியாலயத்திற்குமாற்றப்பட்டார், 1944ல் ஆஸ்தரேலியாவில் பிரிட்டிஷ உதவிக் கமிஷனராக நியமிக்கப்பட்டுச் சேவை புரிந்து வருகிறார். திரு. ஹங்கிங்ஸன் மணமானவர் என்று அறியப்படுகிறது.

“ஆஸ்பத்திரி வசதிகளை ஏற்படுத்துக”

கிராம முன்னேற்றச் சங்கத்தில் தீர்மானம்

அச்சுவேலி, டிச. 11

கிராம முன்னேற்றச் சங்கக் கூட்டத்தில சுகாதார மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளும் அடியிற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

அச்சுவேலி கிராம ஆஸ்பத்திரியில் சிகிச்சையாளர் அதிகம் கூடியிருப்பதால் தற்போதுள்ள கட்டிட வசதி அதற்குப் போதாமலிருக்கிறது. அன்றாடம் வந்து வைத்தியம் செய்விப்போருக்கு தங்குவதற்குரிய வசதிகள போதாமலிருக்கின்றன. அதற்கேற்ற கட்டிடம் கட்டி நோயாளருக்குத் தக்க பாதுகாப்பளிக்கப்படவேண்டும்.

இவ்வாஸ்பத்திரியில் பிரசவ வார்ட் இல்லாமையால் சாதாரணமான வார்டிலேயே இதுவரை பிரசவ பெண்கள் தங்கி வருகின்றனர். கூடிய விரைவில் ஓர் பிரசவ வார்ட் கட்டித் தரும் வசதிகள் செய்யப்படவேண்டும்.

மேற்கண்ட தீர்மானம்பற்றி மேற்படி சங்க தூது கோஷ்டியொன்று திரு தம்பிமுத்து அவர்கள் தலைமையில் செனட்டர் ஏ. கார்டினர் அவர்களை அவரது அச்சுவேலி வாசஸ்தலத்திற் பேட்டிகண்டு பேசியது. [ந-நி]

“இலங்கை சுவர்க்கலோகம் போல் இருக்கிறது”

பிரசித்திபெற்ற பொருளாதார நிபுணர் கருத்து

கொழும்பு, டிச. 12

குவின்ஸலாந்து அரசாங்கத்தின் நிதி சம்பந்தமான ஆலோசகரும் உத்தியோகரீதியான புள்ளி விபர நிபுணரும் உலகப் பிரசித்தி பெற்ற பொருளாதார அறிஞருமான திரு. கொலின் கிளார்க் இன்று இலங்கையிலிருந்து சென்னை புறப்பட்டார். அவர் சென்னையிலிருந்து கல்கத்தா போய் அங்கிருந்து பிரிஸ்பேன் செல்வார் எனத் தெரிகிறது.

அவர் ஒரு வாரம் வரையே இலங்கையில் இருந்தார். ஆனால் அவர் இலங்கையைப் பற்றி 16-வது நூற்றுண்டின் சுவர்க்கலோக சித்திரம் போல் இருப்பதாகக் குறிப்பிட்டதாக அறியப்படுகிறது.

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

விஷம்போல் ஏறியுள்ள விலைவாசிகள்

கள்ளமார்க்கெட்டும் கைலஞ்சமும் அதிகரிப்பு

ஏழைகள் திண்டாட்டம்; பண மூட்டைகள் கொண்டாட்டம்

இலங்கையைக் காட்டிக் கொடுத்து 'சுதந்திர'மென்று ஏமாற்றும் கோஷ்டி

சென்ற வியாழக்கிழமை பிரசுரமான "காலப" என்னும் அகில இலங்கை பிக்குமார சங்கத்து பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது:-

தேச மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைமையோ படுமோசமாய்க்கொண்டு வருகிறது. அன்றாட தேவைக்கு வேண்டிய உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்ளுவதற்கு ஏழைகள் படும் பாடு பெரும் பரிதாபமாய் இருக்கிறது. ஆனால் எவற்றையும் பிளாக் மார்க்கெட்டில் தேவையான மட்டும் பெறக்கூடியதாய் இருக்கிறது. வரவர வேலையில்லா திண்டாட்டமும் பொருளாதார மந்தமும் வறுமையும் அதிகரித்துக்கொண்டு வருவதோடு வாழ்க்கைச் செலவே தலைக்கு மேலேறி வருகிறது இதற்கெல்லாம் தேசாபிமானிகளென்போரின் பிற்போக்கு சக்திகளும் உடந்தையாயிருக்கின்றன.

இரகசிய உடன்படிக்கை

இந் நிலைமையில் சேனாநாயக்கா-மூர் உடன்படிக்கை இரகசியமாய் முடிந்துவிட்டது. இதனால் கிடைக்கப்போகிற சுதந்திரத்தைப்பற்றி இலங்கை மக்கள் மட்டற்ற சந்தோஷமடைகிறார்களென்று, இங்கிலாந்திலிருக்கும் பெரிய சாம்ராஜ்ய எஜமானர்களுக்கு காட்டிக்கொள்வதற்கென்று, பார்லிமெண்டிலும் செனட்டிலுமாக பாராட்டு மசோதாவும் நிறைவேற்றப்பட்டுவிட்டது.

பிடிவாதமான அலட்சியம்

எனினும் திரு சேனாநாயக்காவுக்கு தேசத்திலிருக்கும் கஷ்டதுக்கங்கள் எதுவும் தெரியாது தெரிந்தாலும் அதைப்பற்றி எண்ணமாட்டார்; ஒரு சமயம எண்ணிவிட்டாலும் எதையும் செய்துவிடமாட்டார். ஏழை மக்களின் விஷயம் எப்படித்தான் குட்டிச் சுவராய்ப்போய் விட்டாலும் தம் போன்ற குடும்பத்தினர்கள் சிறப்பாய்விடுகிறார்களென்பது மட்டும் திரு சேனாநாயக்கா அறிவார். அவர்களின் கலியாண வீடுகள், விருந்துகள், சுப சோபனங்களுக்கும், அவர்களின் விவாகப் பதிவுகளுக்கு சாட்சியாக கைச்சாத்திடவும், மற்றப்படி அவர்களின் இழவு வீடுகளுக்கும் தம் தோழர்களுடன் செல்வதற்கு திரு சேனாநாயக்கா தவறமாட்டார். இவ்வளவு சாணக்கிய தந்திரம் இருக்கும்போது, இனிமேலும் தேச மக்களின் விருப்பு வெறுப்புகளுக்கு திரு டி. எஸ். சேனாநாயக்கா போன்ற பெரிய பேர்வழிகள் செவி சாய்ப்பதென்றால் எவ்வளவு வெட்கக் கேடு? எனவே அவர் பொது மக்களை லட்சியம் பண்ணவே இல்லை. திரு சேனாநாயக்கா, தம் போன்ற பணக்காரர்களையும் முதலாளிகளையும் மாத்திரம்தான் தேச மக்கள் என்று எண்ணியிருக்கிறார்.

பழைய கெட்டித்தனம்

பார்லிமெண்ட், செனட் சபை, கால்பேஸ் ஹோட்டல், லேக் ஹவுஸ் பத்திரிகைகளிலும் "டொமினியன்" சுதந்திரம் கிடைத்துவிட்டதாக பிரசாரம் செய்யப்படுகின்றன இதற்காக பாராட்டு வைபவங்களையும் நடத்துகிறார்கள். இதற்கிடையில் தத்தமது செல்வச் சிறப்புகளை மார்பு தட்டி பேசிக்காட்டி முன்னணிக்கு வர விரும்புகிற சந்தர்ப்ப வாதிகளும் இல்லாமலில்லை. ஸர் ஒலிவர் குணத்திலகாவும் தனது பழைய கெட்டித்தனத்தை உரத்த குரலில் பேசித் தள்ளுகிறார் என்ன தான் பிரசாரம் நிகழ்ந்த போதிலும், வாய்பொய் சொன்னாலும் நா பொய் பேசாதென்ற ஊர்ப் பேச்சின் உண்மையை இன்றுள்ளவர்கள் நன்கறிவார்கள்

நம்பிக்கையற்ற தேசத் தலைவர்கள்

இலங்கையைப் பிரிட்டிஷாரின் விருப்பம்போன்று யுத்த அரணாக்கவும், வெள்ளை-கறுப்பு பணக்கார முதலாளிகளின் விருப்பம்போன்று தேச மக்களின் உரிமைகளைச் சூறையாடிக்கொள்ளவும், இரகசியமாக செய்யப்பட்ட அடிமைச் சாசனத்தை, சுதந்திர உடன்படிக்கையென்று பிரசாரம் செய்யும் இவர்களை தேச மக்கள் இனிமேலும் நம்பமாட்டார்களென்பது நிச்சயம்.

இந்த கைத்தாளக்காரர்களின் பாஷையில் சொன்னால் இலங்கைக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்த வீராதி வீரர் திரு டி. எஸ். சேனாநாயக்காவிலும் பார்க்க மிகவும் பிரயாசைப்பட்ட சத் புருஷர்கள் ஸர் ஜேப்வி லேட்டனும் மாஜி இலங்கை கவர்னர் ஸர் ஆண்டரூ கால்டிகாட்டுமேயாவர். பிரிட்டிஷ் யுத்த தலைவருக்கும் கவர்னருக்கும் கிடைந்த இத்தேச மக்களுக்கு, இவர்கள் சுதந்திரம் பெற்றுக் கொடுக்க முயற்சிக்கும்போது, இங்கேயுள்ள கொழுத்த மனிதர்கள் சும்மா இருப்பது எவ்வளவு வெட்கக் கேடாய் இருக்கும்? இந்த வெட்கக் கேட்டிலிருந்து தப்புவதற்கு மற்றெல்லாரிலும் பார்க்க முன்கூட்டியே சுதந்திரம் பெறுவதற்கு பாடுபட்டவர் தானேயென்று காட்டிக்கொண்டார் திரு டி. ஆர். விஜயவர்த்தன.

காட்டிக் கொடுத்ததற்கு சந்தோஷம்

ஸர். ஜேப்வி லேட்டன், ஸர் அன்டுரு கால்டிகோட், ஸர். ஒலிவர் குணதிலகா, டி. எஸ், சேனாநாயக்கா, டி. ஆர். விஜயவர்த்தன ஆகிய ஒரு பாத்திரத்திலே உணவருந்திய பஞ்சமா சாம்ராஜ்ய பந்தக்காரர்களினால் கிடைக்கிற சுதந்திரம் என்னதானென்று பொதுமக்களுக்கு இப்பொழுது நன்றாக தெரிந்து விட்டது.

பொதுவான லட்சியம்

லேட்டன், ஒலிவர், கால்டிகோட், சேனாநாயக்கா ஆகியவர்களுக்கு இருப்பது ஒரே போராட்டமே, ஒரே கொள்கை, ஒரே நடவடிக்கைதான். லேட்டன், கால்டிகோட், சேனாநாயக்கா இவர்களில் எவர்தான் பிரதம மந்திரியாய் வந்தாலும் இலங்கைக்கு உண்டாகும் நன்மையிலும் சுதந்திரத்திலும், நடவடிக்கைகளிலும் எவ்வித வித்தியாசமும் கிடையாது. எல்லாம் சாம்ராஜ்யத்திற்குத்தான் வாசியாய் இருக்கும்.

இந்த துரோகிகள்?

மற்றெல்லாதேசங்களும் சாம்ராஜ்ய தொடர்பை உடைத்துக்கொண்டு சுதந்திரமடைந்துகொண்டிருக்கும்பொழுது, மேலும் சாம்ராஜ்ய தொடர்பை வலுப்படுத்தமுயற்சிக்கும் ஜாதி துரோகிகள், தேசத்துரோகிகள், நயவஞ்சக துஷ்டர்கள், கோழைகள் ஆகியோர் இலங்கையை விட உலகத்தில் வேறெங்கும் இல்லையென்று அத்தாட்சிப் படுத்துவதற்கு அவ்வளவு சிரமப்பட வேண்டியதில்லை.

கொழும்பு, டிச. 11

கோட்டை நகரசபைத் தலைவராக கடந்த 13 வருடங்களாக விளங்கிவந்த திரு டொனல்ட் ஒபய சேகராவின் சித்திரப் படத்தை நேற்று மே த. கவர்னர் அவர்கள் நாவலையில் திறந்து வைத்தார்.

மீன்பிடித் தொழிலாளிகளுக்கு உபகாரச் சம்பளம்

மந்திரியின் செய்தி அறிக்கை

கொழும்பு, டிச 11

தொழில், தொழிலாராய்ச்சி, மீன்பிடித் தொழில் மந்திரி திரு ஜியார்ஜ் இ. டி சில்வா மீன்பிடித் தொழிலாளிகளுக்கு ஓர் பென்ஷன் திட்டம், சுகாதாரத் திட்டம், சகாய நிதி ஆகியவற்றை நிறுவ உத்தேசித்திருப்பதாக அவர் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மந்திரியார் இவ் வாலோசனையை மீன்பிடி ஆலோசனை சபையாரிடம் சமர்ப்பிப்பார் என்று தெரிகிறது. சகாய நிதிப் பணத்திற்கு அரசாங்கம் 50 வீதமும் தொழிலாளிகள் 50 வீதமும் கொடுக்க வேண்டும் என்று அவர் ஆலோசனை கூறுகிறார்.

பிரஞ்சு யூனியன்

முதலாவது கூட்டம் ஆரம்பம்

பாரிஸ், டிச. 10

பிரான்ஸும் அதன் ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளும் சேர்ந்த பிரஞ்சு யூனியனின் முதலாவது கூட்டம் இன்று ஆரம்பமாயிற்று. இதில் 150 அங்கத்தினர்களிருக்கிறார்கள் பிரான்ஸுக்கு 75 ஸ்தானங்களும் இதர பிரதேசங்களுக்கு 70 ஸ்தானங்களுமுண்டு. மடகாஸ்கரில் போராட்டம் இருந்துவருவதால் அதன் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவில்லை அல்ஜியர்ஸ் பிரதிநிதிகளும் நியமனம் செய்யப்படவில்லை கூட்டத்தை பிரஞ்சு குடியரசுத் தலைவர் ஆரியோல் ஆரம்பித்து வைத்துப் பேசியபோது யூனியனின் பெருமையைப்பற்றிப் பேசினார்.

துருக்கி-சிரியா எல்லையில் குர்திகள் மகாநாடு

சோவியத் ரஷியாவின் தூண்டுதலா?

அங்காரா, டிச. 10

துருக்கி, சிரியா, ஈராக், பாரசீகம் ஆகிய நாடுகளிலுள்ள புரட்சி மனப்பான்மையுள்ள மலை ஜாதியாரான குர்திகளின் தலைவர்களது மகாநாடு துருக்கி சிரியா எல்லையிலுள்ள ஜீரே என்னுமிடத்தில் கூடுகிறது இது சோவியத் ரஷியாவின் தூண்டுகோலாக இருக்குமென்று துருக்கி பத்திரிகை அறிவிக்கிறது. (ராய்ட்டர்)

விமான விபத்துகள்

மஸச்சுஸெஸ்ஸ், டிச. 10

அஸோரஸ் அல்லது கிரீன்லந்திலிருந்து வந்த அமெரிக்க விமானமொன்று "கூஸ்" குடாவுக்கு 15 மைலுக்கப்பால் யாரும் போய்க்கொள்ள முடியாத இடத்தில் விபத்துக்குள்ளாகிவிட்டதென விமானப் போக்குவரத்துத் தலைமைக் காரியாலயத்திலிருந்து செய்தியொன்று கிடைத்தது.

பிரயாணிகளில் சிலர் தப்பி உயிரோடிருப்பதாகவும் அவர்களைத் தேடிக் காப்பாற்ற உடனே ஒரு "ஹெலிகொப்ரர்" இன விமானத்தை அனுப்பி வைக்கும்படியும் அச் செய்தி குறித்தது.

அந்த விமானம் சாதாரணமாக 40 பிரயாணிகளையும் 5 உத்தியோகஸதர்களையும் கொண்டதென்றும் ஆனால் விபத்து நேர்ந்த சமயத்தில் எத்தனை பேரிருந்தார்களெனக் கூற முடியவில்லையாம்.

1946 டிசம்பர் இதே இன விமான விபத்தில் "நியூ இங்கிலாந்தில்" 39 பேர் மடிந்தனர் அதற்கு முந்தின மாதத்தில் 27 பேர் நியூ பௌண்ட்லந்தில் உயிர் துறந்திருக்கின்றனர்.

[ராய்ட்டர்]

மூன்று கஞ்சா-அபின் வழக்குகள்

இருவர் மீது அபராதம்

கொழும்பு, டிச. 12

கும்பனித் தெருவைச் சேர்ந்த சுப்பையா மார்டின் என்பவர் மீது 24 பாக்கெட் கஞ்சா வைத்திருந்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரி தமது குற்றத்தை ஒப்புக்கொண்டார் அவர் மீது ரூபா 100 அபராதம் விதிக்கப்பட்டது.

சென். செபஸ்டியான் வீதியைச் சேர்ந்த லியோன் சிங்கோ என்பவர் மீது 200 கிரெயின் கஞ்சாவும், 1250 கிரெயின் அபினையும் வைத்திருந்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் இருகுற்றங்களுக்கும் ரூபா 1000 வீதம் 2000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது இவ்வபராதப் பணத்தைச் செலுத்தத்தவறினால் 3 மாத கடூழியச் சிறைத்தண்டனை வீதம் இரு குற்றங்களுக்கும் அனுபவிக்க வேண்டும்.

தட்டாரத் தெருவில் உள்ள மொஹிதீன் ஜுனைதீன் என்பவர் 13 அவுன்ஸ் 166 அரை கிரெயின் அபினையும், ஒரு ருத்தல் 2 அவுன்ஸ் 189 கிரெயின் கஞ்சாவையும் வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டார்.

எதிரி தாம் குற்றவாளி அல்ல என வாதித்தார். அதன் பேரில் 750 ரூபா பிணையில் அவர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

நிதி மந்திரியின் புதிய நியமனங்கள்

கொழும்பு டிச. 13

நிதி மந்திரி அவர்கள் ஸர். ஏர்னெஸ்ட் டி சில்வா அவர்களையே 1948ம் வருடமும் இலங்கை அரசாங்க ஈட்டு வங்கியின் டைரக்டர் போர்டின் தலைவராக நியமித்துள்ளார்.

1948 ஜனவரி தொடக்கம் வங்கியின டைரக்டரில் ஒருவராக ஆர். சபாநாயகம் எம். பி இ., இ. டி. யை நியமித்துள்ளார். இவரது பதவி ஐந்து வருடங்களுக்கு நீடிக்கும்.

சிறை மீறிச் சென்ற மாஜிப் போர் வீரன்

வனக் குடிசையில் பிடிபட்டான்

கொழும்பு, டிச. 12

வெளிக்கடை ஜெயிலுக்குக் கொண்டுபோகப்படும் வழியில் ஒரு கைதி ஆகஸ்ட் 29ல் தப்பி ஓடினான். இவனது பெயர் சுகததாசா என்றும் அவன் இத்தலி, மத்தியகிழக்கு முதலிய இடங்களுக்குச் சென்று மீண்ட ஓர் மாஜி ஆர். ஏ. எஸ் ஸி. வீரனென்றும் தெரிகிறது.

இவன் போலிஸார் கண்ணிற்படாமல் இருப்பதற்காக பன்னலைப் பகுதியில் ஓர் வனக் குடிசையில் மறைந்து வசித்துவந்ததாகவும், ஓர்நாள் அவன் துயின்றுகொண்டிருக்கையில் போலிஸார் சென்று அவனைப் பிடித்துக்கொண்டதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

சுகததாசாவுடன் தப்பியோடிய இன்னொருவரான டொன் சார்ள்ஸ் இதுவரை கைதியாகவில்லை இவனைப் பிடித்துத் தருவோருக்கு அல்லது பிடிக்கத்தகவல் கொடுப்போருக்கு ரூபாய் 500 நன்கொடை அளிப்பதாக போலிஸபகுதி முன்னர் பிரசுரம் செய்தது. இத்தொகை இப்போது 1000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இருவரும் ஓர் ஆர். ஏ. எஸ். ஸி போர் வீரரே ஆவர்.

வெளிக்கடை ஜெயிலில் இருந்து இரண்டாவது தடவையாகச் சிறை மீறிச்சென்ற டொன் ஜேம்ஸ விஜயரத்னே ஜெயசுந்தரா என்பவரைப் பிடிக்கத் தகவல் கொடுப்போருக்கு ரூபாய் 1000 பரிசென முன்னர் பிரகடனம் செய்யப்பட்டது. இத்தொகை இப்போது 2000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

விவசாயியும் இலங்கை அரசாங்கமும்

(தியாகி)

இலங்கைத் தீவிலே ஏழை மக்களுக்கு விவசாயிகட்கு-தொழிலாளிகட்கு உண்மைச் சுதந்திரம் உண்டா? ஜனநாயக உரிமை உண்டா? யுத்த கால அவசரச் சட்டங்களினுதவியால் விவசாயியின் சுதந்திரங்கள் எல்லாம் காற்றிலே பறக்க விடப்பட்டன உழவுக்கும் தொழிலுக்கும்" நிந்தனை செய்யவும் உபாயங்கள் கையாளப்படுகின்றன. நெல்லை விளைவிப்பதற்கு ஏழை விவசாயி படுகஷ்டங்களை உணர்வார் அரசியற் தலைவர்களாக இல்லாமை நாட்டின் துர் அதிர்ஷ்டமேயாகும்.

நீர்ப்பாய்ச்சல் வசதியில்லாத யாழ்ப்பாணத்தில் ஒரு புசல் நெல்லை விளைவிக்க இருபது ரூபாவிற்கு மேற்பட்ட செலவுண்டென்பதற்குத்தக்க ஆதாரங்களுண்டு. அரசினர் மாதிரிப் பண்ணைகளிலோ ஏற்படும் செலவோ இதனிலும்எவ்வளவு கூடுதலாகும் அந்நியநாட்டிலிருந்துவரும் அரிசியின்விலையுமோ ஒரு கொத்து 62 சதமாகும் இவ்வாறிருக்க ஏழை விவசாயி இடம் நெல்லை ஆறு ரூபாவிற்குப் பெறுவது எவ்வளவு நீதிக்குப் பங்கமான செயலாகும் இவ்வகையான அநீதி உலகில் எந்நாட்டிலாவது நடைபெறுகின்றதா? தேயிலை உற்பத்தி செய்வதற்கு ருத்தல் ஒன்றிற்கு ஒரு ரூபாய் முடியும் என்று வைத்துக்கொள்வோம். அங்கே நமது துரை மக்கள் 99 சதத்திற்குத்தானும் அரசாங்கத்திற்கு விற்பதற்குச் சம்மதிப்பார்களா? அப்படிக் கேட்பதற்கு அரசாங்கத்திற்குத் துணிவுதான் வருமா?

விவசாயிகட்கு ஏராளமான உதவிகள் அரசாங்கம் செய்வதாகப் பறையடிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் தேடுவாரற்றுக் கிடக்கும் எலும்புப் பசளையையே காண்கிறோம். இப் பசளை நீர்ப் பாய்ச்சற் பகுதிகட்கே ஏற்றதாமாகையால் யாழ்ப்பாணத்தவர் இதனை நாடுவதில்லை. ஆயுதங்கள் விவசாயிகட்கு - உண்மையாக நெல் விளைவிப்பவர்கட்கு - அரசாங்கத்து நெல் கொடுப்பவர்கட்கு-கொடுபடவில்லை ஏழை விவசாயிகள் மண்வெட்டி முதலிய ஆயுதங்களை விலைக்கு பெறுவதற்குக் கூட அரும்பாடுபடுகின்றனர்.

இப்போது இருக்கும் மந்திரிகளின் அபூர்வ சட்டத்தின படி விவசாயி தன் வியர்வை சிந்த உழைத்து பிரபுக்களுக்கு அவர்கள் கட்டளைப்படி நெல்லை விற்க வேண்டும் நெல் விளைந்ததும் அருவி வெட்டுவதற்கு உத்தரவு வேண்டும். நெல்லை வீட்டிற்குக் கொண்டு போகவும் உத்தரவு வேண்டும் அந்தோ! பரிதாபம்! அரும்பாடுபட்டுப் பயிரிட்டமை மாபெருங் குற்றம்! விவசாயிகள் இந்த அடக்குமுறைச் சட்டங்களிலிருந்து விடுதலை பெறும் நாளும் உண்டோ?

இக்காலத்தில் நடைபெறும் உள்நாட்டு நெல் வாங்கும் திட்டத்தின் ஊழல்களை யார் அறியார். கிராம விதானைமார் இந்தத் திட்டத்தின் பயனாகக் குபேரசம்பத்து அடைந்தமையை யார் அறியார்? இவர்களுடைய பண நிலை உன்னதமடைந்தமையைப்பற்றி விசாரணை ஒன்று நடத்தப்படின் உண்மைகள் பல வெளியாகும். விவசாயிகளிடம் நெல்லைப் பெற்று அரசாங்கத்திற்கு அதை ஒப்படையாது விடுவதற்கு அவர்கள் எத்தனை தந்திரங்கள் கையாளுகின்றனர். உதாரணமாக ஒரு கிராமத்தில் ஆயிரம புசல் நெல் திறை நெல்லாக அறவாக்கப்பட்டால் அரசினருக்கு எண்ணூறு புசலே போய்ச் சேரும் தாம் அபகரிக்கும் நெல்லிற்குரிய விளை நிலங்கள் எல்லாம் "அழிந்து போயின" என அறிக்கையிடப்படும். ஒரு புசல் ஒன்றிற்கு 4 கொத்திற்கு மேலாக கள்ள அளவினாலும் கூடிய நெல்லைக் கிராம வாசிகளிடம் பெறுகின்றனர்.

விவசாயிகட்கு நீதி வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கு உண்மையான உதவி செய்யப்பட வேண்டும். உதவி செய்யாவிடின் அவர்கள் விளைவிக்கும் பொருளைச் சுதந்திரத்துடன் கையாளும் உரிமை அவர்களுக்குக் கொடுபட வேண்டும்.

பாலஸ்தீனம்

மே மாதம் 15-ம் தேதி பிரிட்டன் வெளியேறும்

கவர்னர் நியமனம் பற்றி ஐக்கியதேச கமிஷன் ஆலோசனை

ஹாவனு மகா நாட்டில் அராபியரின் யூதச்சரக்குகள் பகிஷ்கார விஷயம்

பாதுகாப்பு கவுன்ஸிலுக்கு அராபிய நாடுகள் பாலஸ்தீன பிரச்னையை சமர்ப்பிக்காது

லண்டன், டிச. 12

"1948-வது வருடம் மே மாதம் 15-ம் தேதி பாலஸ்தீன பாதுகாப்பு நிர்வாக ஆட்சியை பிரிட்டன் ரத்து செய்துகொள்ளும். ஆகஸ்ட் முதல் தேதிக்கு முன்பு எல்லா பிரிட்டிஷ் துருப்புகளும் பாலஸ்தீனத்திலிருந்து பிரிட்டன் வெளியேற்றிவிடும்." என்று நேற்றிரவு காமன்ஸ சபையில் பாலஸதீனத்தைப்பற்றி இரண்டு நாள் விவாதம் ஆரம்பமான போது குடியேற்றநாட்டு மந்திரி க்ரீச் ஜோன்ஸ் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

பிரிட்டிஷ் நிர்வாகம் ரத்தாகும் வரை, பாலஸதீனத்தில் அமைதியை நிலைநாட்டும் பொறுப்பு பிரிட்டிஷ் துருப்புகளைச் சேர்ந்தது. யூதர்களும் அராபியர்களும் ஆத்திரங்கொண்டு கலகங்கள் செய்யாதிருக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறேன். சட்ட விரோதமாக வெளிநாடுகளிலிருந்து யூதர்கள் இன்னும் சில மாதங்களுக்கு பாலஸதீனத்தில் குடியேறலாகாது. அப்படிச் செய்தால் அபாயகரமான நிலைமை ஏற்படும்.

பாலஸதீனத்திலிருந்து வெளியேற பிரிட்டன் செய்துள்ள தீர்மானத்தை எதிர்க்கட்சியின சார்பாக ஆதரித்துப் பேசிய கர்னல் ஒலிவர் ஸ்டான்லி, கூடிய சீக்கிரம் வெளியேறிவிட வேண்டுமென்று தெரிவித்தார்.

160 பேர்கள் மாண்டனர்

ஜெருசலம், டிச. 12

சென்ற 12 தினங்களாக பாலஸதீனத்தில் நடைபெற்ற யூத-அராபிய கலகங்களில், 160 பேர்கள் மாண்டனர்.

ஜாபா நகரை அராபியர்களே பாதுகாத்துக் கொள்ளும்படி அராபிய போலிஸ படை நிறுவப்பட்டது. அதேபோன்று யூதர் நகரங்களையும் அராபியர் நகரங்களையும் அந்தந்த வகுப்பினர் பாதுகாத்துக்கொள்ளும்படியாக போலிஸ் படைகள் நிறுவப்படும். பிரிட்டிஷ் துருப்புகள் காவல் செய்யப்படவேண்டும் இடங்களில் இவ்வித ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

அராபிய லீக்

கெய்ரோ, டிச. 12

ஐக்கிய தேச பாதுகாப்பு கவுன்ஸிலில் பாலஸ்தீன பிரச்னையை சமர்ப்பிக்கவேண்டியதில்லையென்று அராபிய லீக் முடிவு செய்தது. இன்றுமாலை லீக் கவுன்ஸில் மீண்டும் கூடுகிறது.

ஸிரியா பாதுகாப்பு மந்திரி ஷாரட்டிபே நேற்று கெய்ரோ வந்தார். ஈராக் பிரதம மந்திரி வருகை எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிட்டன் மீது குற்றச்சாட்டு

ஜெருஸலேம், டிச.11

அராபியர்களுக்கு ஆதரவு காட்டி பிரிட்டன் பாரபட்சமாக நடந்து கொள்வதாக யூதப் புரட்சி ஸ்தாபனம் குற்றஞ்சாட்டியது

ஜெருஸலேத்தில் யூதர்கள் வசிக்கும் பகுதியில் அராபியர்கள் ரகசியமாகப் பிரவேசித்து யூதக் கோயில் மீது அராபியக் கொடியைப் பறக்கவிட்டனர். பெருங் கலகமேற்பட்டது. பிரிட்டிஷ் துருப்புகள் நகரின் கோட்டை வாசலை அடைத்து அமைதியை நிலைநாட்டினர்.

டெல் அவிவ் நகரிலிருந்தும் மத்திய பாலஸ்தீனத்திலிருந்தும் பிரிட்டிஷ் துருப்புகள் வெளியேறுகின்றன.

ஐக்கிய தேசக் கமிஷன்

நியூயார்க், டிச. 11

ஐக்கிய தேச அறுவர் கமிஷன நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ள ஒரு கவர்னர் நியமிப்பதுபற்றி ஆலோசனை செய்தது.

ஹாவனுவில் பேச்சு

ஹாவனு, டிச. 11

அராபியர்கள யூதர் சரக்குகளைப் பகிஷ்கரிப்பது சம்பந்தமாக ஈராக் பிரதிநிதி கொண்டுவந்த தீர்மானம்பற்றி இன்று உலக வர்த்தக மகாநாட்டில் கேள்விகள் கேட்கப்பட்டன. அரசியல் காரணத்திற்காகப் பொருளாதார பகிஷ்காரம் செய்யும் பிரச்னைபற்றி ஐக்கிய தேச ஸதாபனம் முடிவுசெய்யவேண்டுமென்று காரியதரிசி பதிலளித்தார். [ராய்ட்டர்]

எஞ்ஜினீரிங் பரீட்சை முடிவு

21 பேர் சித்தி

கொழும்பு, டிச 12

நேற்று வெளியான பரீட்சை முடிவுகளின்படி இலங்கை டெக்னிக்கல் காலேஜில் 21 மாணவர்கள் எஞ்ஜினீரிங் பட்டங்கள் பெற்றுள்ளார்கள். இவர்களில் மூவர் முதலாம் வகுப்பு விசேஷ சித்தியும், நால்வர் இரண்டாம் வகுப்பு விசேஷ சித்தியும் பெற்றிருக்கிறார்கள்.

இங்கிலாந்திலுள்ள கல்லூரிகளின் முடிவோடு ஒப்பிடுகையில் இது மிகவும் பாராட்டத்தக்க முடிவென்று சொல்லப்படுகிறது.

இலங்கை எஞ்ஜினீரிங் சங்க வருடாந்த மகாநாடு

கொழும்பு, டிச. 12

நேற்று டெக்னிக்கல் காலேஜ் மண்டபத்தில் இலங்கை எஞ்ஜினீரிங் சங்கத்தினரின் வருடாந்தக் கூட்டம் நடைபெற்றது. கர்னல் ஸ்டான்லி பெர்ஸன்டோ தலைமை வகித்தார். மே. த. கவர்னரும், திரு கென்னத் டி கிறெஸ்டர் ஆகியோரும் பேசினர்கள். டாக்டர் ஆர். வி. பேர்ணஸ் நீர்ப்பாசன சம்பந்தமாக ஓர் கட்டுரை வாசித்தார். இக்கூட்டத்தின்போது இவ்வருட சமனி வெள்ளம் பற்றிய ஓர் படமும் காட்டப்பட்டது.

கொள்ளை வழக்கில் தீர்ப்பு

எழுவருக்கு 12 வருஷ சிறைத் தண்டனை

களுத்துறை, டிச 12

வெலிப்டனையில் ஹின்டன் டி அல்விஸ் செனிவரதன என்பவர் வீட்டைக் கொள்ளையிட்டதாக எணமர் மீது தொடரப்பட்ட வழக்கில் களுத்துறை அசைஸ கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டுவிட்டது.

இவர்களில் எழுவர் மீது தலைக்கு 12 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

எட்டாவது நபரான அந்தோனி மார்ட்டின் குற்றவாளியல்ல எனத் தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

பிரபுக்கள் சபையின் அதிகாரம் குறைகிறது

லண்டன், டிச. 10

மசோதாக்களை 2 வருடத்துக்குத் தடுத்துவைக்கப் பிரபுக்கள் சபைக்குள்ள அதிகாரத்தை ஒரு வருடமாகக் குறைக்கும் பொருட்டுக் கொண்டுவந்த பார்லிமென்ட் மசோதா கீழ்ச்சபையாரால் அங்கீகரிக்கப்பட்டு பிரபுக்கள் சபைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

இலங்கையின் பயங்கரமான பொருளாதார நிலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவந்ததுபற்றி விசாரணை நடத்த ஒரு கமிட்டி நியமிப்பதுபற்றி தீர்மானம் ஒன்று கொண்டுவரப்படும். சமீபத்தில் பிரிட்டனில் பட்ஜெட் தகவல்கள் வெளிவந்த காரணத்தினாலே டாக்டர் ஹூ டால்டன் ராஜினாமா செய்ய நேர்ந்தது. முன் குடியேற்ற நாட்டு மந்திரியாக இருந்த திரு ஜே எச் தோமஸ், அவருடைய மகன் பட்ஜெட் இரகசியத்தை அறிந்தது காரணமாக ராஜினாமா செய்ய நேர்ந்தது.

இலங்கை தியேட்டர்கள் கம்பெனியில் பிரதமரின் மகனும் உள்நாட்டு மந்திரி ஸர் ஒலிவர் குணத்திலகாவின் மருமகனும் பங்குதாரர்களாக இருக்கின்றனர்.

ஜனநாயகத்தை ஆரம்பிக்க விரும்புவதானால் திட்டமான முறைப்படி ஒழுங்காக ஆரம்பிக்கவேண்டும். இத்தகைய சம்பவங்களை விசாரணை செய்யப்படாது விட்டுவிட முடியாது.

புகையிலை, பீடிப் புகையிலை முதலியன மீதுள்ள வரியை நான் ஆட்சேபிக்கின்றேன். கண்டிராக்ட் எடுத்திருந்தோர் யுத்தகாலத்தில் கொள்ளை லாபமடித்துள்ளனர். இந்த லாபங்கள் கிடைத்த முறைபற்றி அரசாங்கம் விசாரணை நடத்தி அவற்றை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

இலங்கையிலுள்ள வங்கிகள் தேசிய மயமாக்கப்பட வேண்டும். பஸ் போக்குவரத்தும் தேசிய மயமாக்கப்பட வேண்டும். உணவுப் பொருள்கள் மீதுள்ள வரிகள் குறைக்கப்படவேண்டும்.

இலங்கையின் முழு நிர்வாகமுமே ஊழல்கள் நிறைந்ததாக இருக்கிறது. கடந்த 15 வருடங்களாக இவற்றை ஒழிக்கமுடியாது பிரதமர் இருக்கிறார்.

திரு பிலிப் குணவர்தன பேசி முடிந்ததும் பிரதமர் எழுந்து தம் மீதும் உள்நாட்டு மந்திரி மீதும், சில குற்றச்சாட்டுகளை திரு குணவர்தன கூறியுள்ளதாகவும் அவ்விதம் கூறுவதானால் நேரடியாகக் குற்றச்சாட்டுகளைக் கூறவேண்டுமென்றும் சபாநாயகரிடம் தெரிவித்தார்.

நேரடியான குற்றச்சாட்டுகள் எதுவும் கொண்டுவரப்படவில்லையென்றும் விசாரணை நடத்தப்படவேண்டுமென்று அங்கத்தவர் கூறியதாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

தேச உணவுப் பொருள் நிலை

உணவு மந்திரி திரு ஏ. ரத்னாயக்கா பேசுகையில், இன்றுள்ள பெரும் பிரச்னை உணவுப் பிரச்னையே யென்றும் தேசத்தின் உணவுத் தேவையில் மூன்றில் இரு பங்கும் வெளிநாடுகளிலிருந்துதான் கிடைப்பதாகவும் அரசாங்கம் ஒரு கொத்து அரிசிக்கு 26 சத வீதம் உதவுவதாகவும் உலக நாடுகளின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன வென்றும் இப்பொழுது இலங்கையின் உணவு நிலை மிக மோசமாக இருப்பதாகவும் உள்நாட்டுக் கலகங்கள் காரணமாக வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்கள் கிடைப்பது கஷ்டமாக இருப்பதாகவும் கூறினர்.

உணவுப் பொருளுக்கு அரசாங்கப் பண உதவி

மேலும் இலங்கையின் அரிசி கொள்வனவுக்கு அரசாங்கம் மாத வீதம் 70 லட்சம் ரூபாய் உதவுவதாகவும் மாவு கொள்வனவுக்கு அரசாங்கம் மாத வீதம் 50 லட்சம் ரூபாய் உதவியளிப்பதாகவும் உணவுப் பொருளுக்காக மாத வீதம் அரசாங்கம் ஒரு கோடியே 20 லட்சம் ரூபாய் உதவியளிப்பதாகவும் மற்றும் உணவுப் பொருள்களினால அரசாங்கத்துக்கு மாத வீதம் ரூபாய் 900,000 நஷ்டமென்றும் கூறினர்

மேலும் உடனடியாக உணவு உற்பத்தி அபிவிருத்திக்கு தகுந்த நடவடிக்கைகள் எடுத்து தேசமக்களை பட்டினியிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்றும் அவர் கூறினர்.

யாழ்ப்பாண தொகுதி பிரதிநிதி திரு ஜீ ஜீ பொன்னம்பலம் பேசியதாவது:-

20 கோடி ரூபாய்

கடந்த 10 வருட காலத்தில் முந்திய அரசாங்க சபையினால் 20 கோடி ரூபாய் எடுக்கப்பட்டது இந்த ரூபாய்கொண்டு மக்களின் முன்னேற்றத்துக்கு ஏதாவது செய்யப்பட்டதா என அறிய விரும்புகிறேன் தேசத்தின் முன்னேற்றத்துக்கான வேலைகள் நடக்கப்படவில்லை. ஒரு சில குடிசை ஆஸ்பத்திரிகளையும், போதிய ஆசிரியர்களோ தகுந்த தளவாடங்களோ இல்லாத சில பாடசாலைகளையும் அமைப்பதால் தேசமக்கள் நிலையை முன்னேற்றமடையச் செய்ய முடியாது. தேசத்தின் நிர்வாகத்துக்கு மிகப் பெருந் தொகையை செலவிடுவது அரசாங்கத்தின் அமைப்பு நிலைமையைத்தான் வெளிக்காட்டுகின்றது.

யுத்தப் படிச்செலவு

தேச வருமானத்தில் 25 சத விகித வருமானமும் யுத்தப் படிச்செலவுகளுக்காக எடுக்கப்படுகிறது. தேசிய வருமானத்தில் 23 சத விகிதம் அதிகரித்த போதிலும் பிரிட்டன் தனது பாதுகாப்பையும் சமூக சேவையையும்தான் அபிவிருத்தி செய்ய முடிந்தது. இத்தேசத்தின் வருமானத்தை எவ்விதம் அதிகரிக்க நிதி மந்திரி தீர்மானித்துள்ளாரென அறிய விரும்புகிறேன்.

கடந்த காலத்தில் ரப்பர் மரங்களில் பால் எடுக்கப்பட்ட பிழையான முறைகளால் இன்று 30 சத விகித ரப்பர் தோட்டங்களும் பிரயோஜனமற்றவைகளாக இருக்கின்றன ஏராளமான ஏக்கர் தென்னந் தோட்டம் பயனைக் கொடுக்கக் கூடியதாகவும் இல்லை. அதனால் வருவாயும் குறைந்துவிட்டது இவ்விதமாகத்தான் இலங்கையின் பொருளாதாரம் இருக்கிறது. மகா மோசமான இந்த நிலையை எல்லோரும் உணர வேண்டும். தேசத்தின் முக்கியமான இரு உற்பத்திப் பொருட்கள் வருவாய் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருவதால் தேசத்தின் வருமானமே மளமளவென்று குறையப் போகிறது.

இத்தேசத்தின் விவசாயத் தொழில் இன்னும் ஆரம்பகால நிலையிலேதான் இருக்கிறது எருமைகளைக் கொண்டு வேலை செய்விப்பதிலும் பார்க்க இயந்திரக் கலப்பைகளை உபயோகிப்பது முக்கியம்.

சில ரசாயனத் தொழில்கள் பற்றி ஸ்தலஸ்தாபன மந்திரி கூறியிருந்தார். தேசத்தின் முக்கியமான மூன்று உற்பத்திப் பொருள்கள் அதிகாரத்திலுள்ளவர்களால் மிகவும் குறைந்த விலையில் பண்டமாற்றுச் செய்யப்படுகின்றன. இப்பொருள்கள் வெளி உலக மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்கமுடியும். இலங்கை வெளிநாடுகளில் இருந்து அவ்வந்நாடுகள் கூறும் விலைக்கு அதிக பணம் கொடுத்து உணவுப் பொருள்களை வாங்குகிறது.

உள்நாட்டு விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் வாங்கும் நெல்லுக்கு புசல் ஒன்றுக்கு ரூ 6 வீதம் வழங்கப்படுகிறது. உள்நாட்டு விவசாயிகள் இத்தொகை போதாதெனக் கூறுகின்றனர். நெல்லுக்கு அதிக பணம் கொடுக்கப்பட்டால் தேசத்தின் நெற் சாகுபடி அதிகரிக்கும். உள் நாட்டில் நெற் சாகுபடி அதிகரித்தால் வெளிநாடுகளில் இருந்து அரசாங்கம் வாங்கும் உணவுப் பொருள்களுக்கு உதவும் பெருந்தொகையான பணத்தை மீதப்படுத்த முடியும்.

எங்களுடைய உணவுக்கு ஸ்டெர்லிங் பாக்கியிலிருந்து பணம் கொடுக்கப்படுகிறது. பிரிட்டனில் இலங்கையின் மூலதனமாக இந்த ஸ்டெர்லிங் பாக்கிகள் இருக்கின்றன. யூ. என் பி அரசாங்கம் இன்று நடப்பது போல தொடர்ந்து நடந்துவருமாயின் பிரிட்டனில் உள்ள மூலதனம்-ஸ்டெர்லிங் பாக்கிகள்- இன்னும் சில வருடங்களில் செலவாகிவிடும். அப்படியென்றால் தேசம் வங்குரோட்டாகிவிடும் என்பதுதான்.

இலங்கையின் நாணய செலாவணி யுத்த காலத்தில் பிரிட்டனின் நோட்டுப் புளக்கத்தால் பெருகிவிட்டது. இந்நாட்டிலே இந்த பொறுப்பற்ற நோட்டுகளின் புளக்கம் காரணமாக தேச நாணய செலாவணியில் ஐந்து மடங்கு பெருகிவிட்டது. இலங்கையின் ரூபா நாணயம் மறைமுகமாக பிரிட்டனின் ஸ்டெர்லிங்குடன் இணைக்கப்பட்டுள்ள தென்பதே இதன் உண்மையாகும். சொத்துக்களின் மதிப்பிலும் வருமான மதிப்பிலும் இந்த நாணய செலாவணிப் பெருக்கம் பெரும் மாறுதல்களைக் கொண்டுவந்துள்ளது நாணய செலாவணிப் பெருக்கத்தைத் தடுக்க நேரடியான வருமானவரி விதிக்கப்பட வேண்டும். தினமும் தோட்டங்கள், அதிகரிக்கப்பட்ட விலை விகிதப்படி கைக்குக் கை மாறுகின்றன. பாடுபட்டு உழைக்காத வருமானத்திலே வரி விதிக்க வேண்டும். மூலதனத்தின் மீது வரிவிதிப்பதனால் நாணய செலாவணிப் பெருக்கத்தைத் தடுக்க முடியும்

இரவு எட்டு மணியானதால் சபை நடவடிக்கை போஜன இடைவேளைக்காக ஒத்திவைக்கப்பட்டது. இரவு போஜன இடைவேளைக்குப் பின் திரு ஜீ ஜீ. பொன்னம்பலம் பேசியதாவது:-

அதிகரிக்கப்பட்ட வரிகளின் காரணமாக வெளிநாட்டுப் பொருள்களின் விலைகள் அதிகரித்ததுடன் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துவிட்டன. இவற்றையெல்லாம்விட வாழ்க்கைச் செலவும் மிகவும் அதிகரித்துவிட்டது

இன்று தேசத்திலே வேலையில்லாப் பிரச்னை பெரும்பிரச்னையாக இருந்து வருகிறது. தேசம் முழுமையும் இன்று 1,000,000 பேர் வேலைகளின்றி இருக்கின்றனர். இத்தொகை இன்னும் அதிகரிக்கக் கூடும்.

வெண்ணெய், பணக்காரரின் போகப் பொருளல்ல. அது ஏழைகளுக்கு அவசியம் வேண்டிய பொருளாகும். தேசத்திலே ஏழை மக்கள் வெண்ணெய் உண்பது கூடாதென வர்த்தக மந்திரி எண்ணினார்போலும்.

உணவுப் பொருட்களின் மீதுள்ள வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் ரப்பருக்கு அரசாங்க பண உதவி அளிக்கப்படுகிறது.

மந்திரிகளின் சம்பளத்திலும் பார்க்க அதிகமான சம்பளங்கள் நிரந்தரக் காரியதரிசிகளுக்குக் கொடுப்பது பெரும் விசித்திரமானதாகவே இருக்கிறது

தேசத்தின் வர்த்தகத்தையும் தொழில்களையும் பாதுகாக்கப்படுவது மிக அவசியம்.

இந்த பட்ஜெட், கண்டிராக்டர்கள், கொள்ளை லாபக்காரர்கள், கள்ளமார்க்கெட்டினர், சாராயக் குத்தகையாளர் ஆகியோருக்கு ஏகபோக ஆதிக்கத்தை அளித்துள்ளது. இத்தேசத்திலே பட்ட தொழிலிலும் ஏகபோக ஆதிக்கம் இருக்கிறது தமாஷாவரி இப்பொழுது பொது மக்கள் மீது சுமத்தப்பட்டுவிட்டது. பஸ் போக்குவரத்து துறையிலும் ஏகபோக ஆதிக்கம் செலுத்தப்படுகிறது.

தேச பொருளாதாரம்

தேசத்தின் பொருளாதார நிலையை குறிப்பாக கூறமுடியும். தேசத்திலுள்ள தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன ரயில்வே போக்குவரத்து வெள்ளையானையைக்கட்டி வளர்ப்பது போல இருக்கிறது ரஸ்தா போக்குவரத்து குறிப்பிட்ட ஒரு சிலரின் ஏகபோக ஆதிக்கத்துள் அடங்கிக் கிடக்கிறது சின்னஞ்சிறிய இந்த இலங்கைக்கு அவர்களின் சேவைகள் மிக சிறியவை. குறைந்த விலையில் மின்சார வெளிச்சம் கொடுக்க முடியுமென்று ஆரம்பிக்கப்பட்ட நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்ட வேலைகள் முடிவடையவில்லை. நிர்வாகம், ஊழல் நிறைந்திருக்கிறது. தொழிலாளரின் வீட்டு வசதிகள் பேசவேண்டியதில்லை. தொழிற்கல்வி போதனைக்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. உணவு மந்திரியின் பேச்சின்படி இன்னும் உணவுக்குப் பிச்சை எடுக்க வேண்டியேதான் இருக்கிறது. வேலையில்லாப் பிரச்னை இன்னும் தீர்க்கப்படவில்லை. குடைசாயும் இந்த பொருளாதாரக் கட்டத்தின உச்சிமீது தேசத்தின் மூலதனத்தை விரயம் செய்யப்படுகிறது. நன்மை பயக்கக் கூடியதாக இருந்த நிர்வாகத்தினிடையே ஊழல் நிறைந்த நிர்வாகம் புகுந்துள்ளது.

திரு எஸ். டபிள்யூ ஆர். டி பண்டாரநாயகா பேசுகையில சர்வ தேச நிலைமை மிகவும் நெருக்கடியானதாக இருப்பதாகவும், தேசத்தின் மோசமான நிலைமை படம்பிடிப்பதுபோல யாழ்ப்பாண தொகுதி பிரதிநிதி எடுத்துக் காட்டியுள்ளாரென்றும் கூறினர்.

இதனுடன் இரவு 10 மணியானதால் சபை நடவடிக்கை இன்று காலை 10 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

கொழும்புக்கு ஆறு அதிக பூந்தோட்டங்கள்

முனிசிபல் சபையின் தீர்மானம்

கொழும்பு, டிச 11

நேற்று நடைபெற்ற கொழும்பு முனிசிபல் சபைக் கூட்டத்தில் மேயர் ஆர். எப். எஸ். டி மெல்லால் 1948ம் வருட வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது திரு ருத்திரா காச நோய் ஒழிப்பு இலாகா என்ற பெயரில் ஒரு பகுதியை முனிசிபாலிட்டி நிர்வகித்து வருவதால் எட்டிய பயன் யாதுமில்லையென்று கூறி இவ்விலாகாவை வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து நீக்கிவிடுமாறு கூறினர். திரு எம். ஜி மெண்டிஸ இதனை ஆதரித்தார் ஆனால் இவ்வாலோசனை நிறைவேறவில்லை டாக்டர் குமாரரதனம் முனிசிபல் கமிஷனரின் அதிகப்படியான படிப்பணத்தைக் குறைக்குமாறு வேண்டினர். இவ்வாலோசனை ஒழுங்கற்றதென மேயர் கூறிவிட்டார். முகத்துவாரம், மருதானை குப்பியாவத்தை மாளிகாவத்தை, ஹவ்லக் டவுன், புளோர்ஸ பெசேஜ் முதலிய இடங்களில் பூந்தோட்டங்கள் நிறுவ வேண்டுமென்றும் நேற்றைய கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

பெண் கொலையுண்டார்

ஒருவர் கைது

கொழும்பு, டிச. 11

பன்னலை போலிஸ் பகுதியில் ஒரு பெண் கழுத்தில் கத்தியால் வெட்டப்பட்டு கொலைசெய்யப்பட்டிருக்கிறார். ஓர் காணி சம்பந்தமான உறுதியைப்பற்றிய சச்சரவே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது இது சம்பந்தமாக எலியாஸ் அப்பு என்பவர் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார். இறந்தவர் பெயர் லார்ஜிலஹாமி எனச் சொல்லபடுகிறது. காயமுற்றதும் குளியாப்பிட்டி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு டிசம்பர் 9ல் அவர் காலமடைந்தாராம்.

வித்தியாதிகாரி ஆசிரியர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, டிச. 11

அனுமதியின்றி அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களாக இருப்பவர்கள் வித்தியாதிகாரியையோ அல்லது அவரின் காரியாலயத்திலுள்ளவர்களையோ கொழும்பில அவர்களின் அனுமதியின்றிக் காணக் கூடாது என்று ஒரு சட்டம் 1943-ம் ஆண்டில் விதிக்கப்பட்டது.

இவ்விதமான அனுமதியின்றி இப்பொழுது பல ஆசிரியர்கள் வித்தியாதிகாரியையும் மற்றவர்களையும் பேட்டிகாண முற்பட்டிருக்கிறார்களாம். ஆகவே இவ்வகையான ஆசிரியர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை வித்தியாதிகாரி டாக்டர் ஐயன் சான்டிமன் குறிப்பிட்டுள்ளாரென்று அறியப்படுகிறது.

பெல்ஜிய மன்னர் வருகைக்கு ஆதரவா?

ஸ்பாக் மந்திரி சபையில் நம்பிக்கை

பிரஸெல்ஸ், டிச. 10

பெல்ஜிய மன்னர் லியபோல்ட் தேசப்பிரஷ்டத்திலிருந்து திரும்பிவர வேண்டுமென்பதை ஆதரித்தும் இப்போதுள்ள ஸ்பாக்கின் மந்திரிசபையில் நம்பிக்கையைக் காட்டியும் பெல்ஜிய பாராளுமன்றத்தில் 152 பேர் சாதகமாகவும் 32 பேர் பாதகமாகவும் வோட் அளித்தனர்.

பெல்ஜியத்திலுள்ள அலெக்ஸான்டர் ஸரனெஸ்கோ என்னும் ருமேனிய ஸ்தானிகர் ஏதோ அரசியல் காரணமாக ராஜினாமாச் செய்திருக்கிறார்.

[ராய்ட்டர்]

ஆசிரியருக்குக் கடிதம்

தமிழ், சிங்கள, மாணவர் அதோகதி

கல்விப் பகுதி மந்திரியார் அவர்கட்கு,

ஐயா,

வித்தியாதிபதி அவர்கள் சுற்று நிருபங்கள் வாயிலாக 1948-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் பின் தனித் தமிழிலும், தனிச் சிங்களத்திலும் எஸ். எஸ். ஸி பரீட்சை நடைபெறுமென்று அறிவித்திருக்கிறார்கள். அது உண்மையாயின் ஒரு சிறிதேனும் ஆங்கிலம் தெரியாமல் தற்பொழுது ஜே எஸ். ஸி, எஸ். எஸ். ஸி வகுப்புகளில் படித்துக்கொண்டிருக்கும் தமிழ், சிங்கள மாணவர்களின் கதி என்னவாகும் ஆங்கில பாடசாலை மாணவருடன் பரீட்சை எடுப்பதென்றால் அது இலகுவான காரியமா? ஆங்கிலம் முற்றுந் தெரியாதவர்கள் கட்டாயபாடமான ஆங்கில வினாப்பத்திரத்துக்கு விடையளிக்க எத்தனை ஆண்டுகள் முயன்று கற்கவேண்டும்? மாணவர்கள் கற்க விரும்பிக் கொண்டாலும் அதனைக் கற்பிப்பதற்கேற்ற ஆங்கில ஆசிரியர்கள் தமிழ் சிங்களப் பாடசாலைகளில் இல்லையே இதனால் பெற்றோரும் மாணவர்களும் கலங்குகின்றனர். மந்திரியார் அவர்கள் இவ்விஷயத்தைத் தீர்க்கமாக ஆலோசித்து, ஆவன செய்யும்படி மிகத்தயவாய்க் கேட்கின்றேன்.

இங்ஙனம்,
ஒரு மாணவன்.
மட்டக்களப்பு.

வால்வெள்ளி தென்படுமென ஏற்கனவே கூறினர்

இந்தியரின் அறிவு

அடலெயிட், டிச. 10

இப்போ சில நாட்களாக தென் வானங்களூடாகச் செல்லக் கவனிக்கப்பட்ட வால்வெள்ளியைப்பற்றிய தகவலை 114 வயதுள்ள நவார் காகாகிங என்னும் இந்தியர் ஏற்கெனவே கூறியிருக்கிறார் என்பதை ஆஸ்திரேலிய அரசாங்க வான சாஸ்திரியான திரு டொட்வெல் இன்று ஊர்ஜிதப்படுத்தினர்.

கிறிஸமஸ் தினத்தன்று நள்ளிரவுக்கு 2 நிமிடங்களுக்குப் பின் சூரியனின் 7 புள்ளிகள் இங்கு தென்படுமென்றும் இன்று கூறினர். 2000 மாவது ஆண்டுக்கு முன் இன்னுமொரு வால் வெள்ளி ஏற்படுமென்றும் அது எந்த யுத்தத்திலும் பார்க்க கஷ்டம் விளைவிக்குமென்றும் உலகத்தின் இறுதி தானென்றும் கூறுகிறார்.

(ராய்ட்டர்)

ஜிந்துப்பிட்டியாவில் இப்பொழுது
தினசரி மாலை 6 மணி, இரவு 9—30 மணிக்கு
கொத்தமங்கலம் சீனு, வி. என். ஜானகி
மற்றும் பலர் நடிக்கும்
'சகடயோகம்'
என்ற சிறந்த தமிழ் படக்காட்சி காட்டப்படும்

ஐசிங் சுகர்
இலங்கையில் முதல்தரமானது
குயின் (ராணி) மார்க்.
இப்போ எங்களுக்கு ஏற்பட்ட சில வசதிகளால் விலை மிகவும் குறைக்கப்பட்டு இருக்கின்றது.
7 ருத்தல் டின்னில் அந்தர் ஒன்றுக்கு ரூ. 160-00
28 ருத்தல் டின்னில் அந்தர் ஒன்றுக்கு ரூ. 150-00
எங்கள் ஸடோர் நிர். 307, செட்டியார் தெருவில் (சீ ஸடிரீட்) எடுத்துக்கொள்ளலாம்.
குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி,
861, அளுத்மாவத்தை ரோடு,
முகத்துவாரம்,
கொழும்பு.
தந்தி "Confection" 'போன்: 4511

ஈகிள் ஹவுஸ் உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்குஇணையற்றது
தாதுசத்துக்கள் நிறைந்த கீழ்க்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள் :—
ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனோ
விநோ
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டீ ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்
தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி,
போன்:- 2193 கொழும்பு.
ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங் கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்த
கன்னிகா
5-வது வாரமாகக் காண்பிக்கப்படுகிறது
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், வ.ம.ல.ல. சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என் ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.
தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு
முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்
"இழந்த உறுதி"
என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்
புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 13-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின்ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.